திருக்கோயில்

மே 1986 விலை ரூ. 2-00

வடபழநி ஆண்டவர் ஆலயத்தில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு இராம. வீரப்பன் அவர்கள் அருணகிரிநாதர் மண்டபத்தைத் திறந்து வைத்து, ஆலயப்பணியாளர் குடியிருப்புக் கட்டுமானப் பணியின் கால்கோள் விழாவினையும் துவக்கி வைக்கிறார். அறநிலையத்துறை ஆணையர் திரு க. சுந்தரமூர்த்தி ஐ.ஏ.எஸ்., மற்றும் ஆலயத் தக்கார் ஏ. என். சீனிவாசராவ் ஆகியோர் உடன் உள்ளனர்.



முகப்பு

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயப் பங்குனித் திருவிழா காட்சிகள்.

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை : 28 | திருவள்ளுவர் ஆண்டு 2017 அட்சய ஆண்டு வைகாசித்திங்கள் மே **1986** விலை ரூ. 2-00 | மணி : 5

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்

உயர்திரு
ஆணையர் அவர்கள்
அறநிலைய ஆட்சித்துறை
சென்னை-600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா ரூ 24.00 மட்டும்.

புதிய சந்தாதாரர்கள் ஒரு ஆண்டிற்கு ரூ. 24/- எனக் கணக்கிட்டு எத்தனை ஆண்டுகளுக்குச் சந்தா கட்ட விரும்பினாலும் அத்தனை ஆண்டுகளுக்குப் பணம் அனுப்பிவைக்கலாம். அவர்கள் எப்பொழுது பணம் அனுப்பினாலும் பணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்தத் திங்களிலிருந்து அவர்கள் அனுப்பிய காலம் முடிய ''திருக்கோயில்'' இதழ் அனுப்பிவைக்கப்படும் என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும். தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில் புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் **(Pin code)** எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

பொருளடக்கம்

சென்னை அருள்மிகு வடபழநி ஆண்டவர் ஆலயத்தில் நடைபெற்ற 150 கிராமக் கோயில்கள் திருப்பணி நிதி வழங்கும் விழாவில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்கள் ஆற்றிய சிறப்புரை.

பாவம் செய்தது யார்?
—இராமகிருஷ்ணபரமஹம்ஸர்

மதுரைத் திருக்கோயில்
—வி. என். சிதம்பரம்

கந்தர் அநுபூதி
—அருணகிரிநாத சுவாமிகள்

எண் வகை யோகம்
—டாக்டர் பொற்கோ

பாரதப் போரில் பார்த்தசாரதி
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

வாசகர் எண்ணங்கள்



சென்னை அருள்மிகு வடபழநி ஆண்டவர் ஆலயத்தில் நடைபெற்ற 150 கிராமக் கோயில்கள் திருப்பணி நிதி வழங்கும் விழாவில்....

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்
திருமிகு **இராம. வீரப்பன்** அவர்கள்



அன்புள்ள, சிறப்புமிக்க இந்த விழாவினுடைய தலைவர் அறநிலையத்துறை ஆணையர் திரு சுந்தர மூர்த்தி அவர்களே ! இந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அன்பிற்குரிய டாக்டர் சௌரிராஜன் அவர்களே! சைதை தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் சைதை துரைசாமி அவர்களே! இந்த ஆலயத்தினுடைய தக்கார் அன்பிற்குரிய சீனிவாசராவ் அவர்களே! அருள்மிகு பழநியாண்டவர் ஆலயத்தினுடைய தக்கார் அருமை நண்பர் பொன்னுசாமி அவர்களே! இங்கே தமிழகத்தினுடைய பல்வேறு கிராமப் பகுதிகளிலே இருந்து ஆலயத் திருப்பணிக்காக வழங்கப்படும் நிதி உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தந்திருக்கின்ற கிராமப்பெருமக்களே! துணை ஆணையர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! நண்பர்களே!

அறநிலையத்துறையின் வரலாற்றில் ஒரு பொன்னாள்

அறநிலையத் துறையினுடைய வரலாற்றில் 84ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள் தமிழகத்தினுடைய தளநாயகர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக அற நிலையத் துறையின் வரலாற்றிலேயே இது வரை இல்லாத 7 கோடி ரூபாய் ஆலய மேம்பாட்டு வைப்பு நிதித் திட்டத்தைத் தொடக்கி வைத்தார்கள். தமிழகத்தினுடைய தொன்மை மிக்க ஆலயங்களாக விளங்கிக்கொண்டிருக்கின்ற ஆலயங்களில் நிதிப் பற்றாக் குறையினாலே பூஜைகள் நடைபெறாமல் நின்று விட்ட அந்த ஆலயங்களில் ஒரு வேளை பூசையாவது நடத்தப்பட வேண்டும் என்பதற்காக

ஐந்து கோடி ரூபாய் வைப்பு நிதியாக வைக்கப்பட்டது. மேலும் ஒரு கோடி ரூபாய் ஆலயத்திலே பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கு அவ்வப்போது அவசரத்துக்காகத் தேவைப்படுகின்ற உதவிகளைச் செய்வதற்காகவும், கடன் வழங்கி அவர்களுக்கு உதவி செய்வதற்காகவும் வைப்புநிதித் திட்டத்தில் வைக்கப்பட்டது. இவை தவிர பழநி ஆலயத்தினுடைய சொந்தப் பொறுப்பில் ஒரு கோடி ரூபாயை வைப்பு நிதியாக வைத்து, அதிலே இருந்து கிடைக்கின்ற வட்டித் தொகையில் தமிழகத்தினுடைய கிராமப் புறங்களில் ஏழை எளிய மக்கள் வாழுகின்ற கிராமங்களில் அவர்கள் வணங்க வேண்டும் என்று விரும்பி ஆலயங்களை எழுப்புகிற முயற்சியிலே ஈடுபடுகிற பொழுது பொருளாதார நெருக்கடியின் காரணமாக ஆலயங்களை எழுப்ப முடியாமல் திண்டாடுகின்ற அந்தச் சிரமங்களை மாற்றுவதற்காகவும், எப்படியாவது கட்டி முடித்துவிடலாம் என்று ஆரம்பிக்கப்பட்ட அந்த ஆலயங்கள் அரைகுறையாக நின்றுவிடாமல் அந்த ஆலயப் பணிகளை முடிப்பதற்காகவும், கிராமப்புற ஆலயங்களினுடைய திருப்பணிக்காக அதிகப் பட்சமாக பத்தாயிரம் ரூபாய் கிராமம் ஒன்றிற்கு வழங்க வேண்டும் என்ற திட்டத்தின் கீழ் அந்த ஒரு கோடி ரூபாய் பழநி ஆலயத்தினுடைய சொந்தப் பொறுப்பிலே உருவாக்கப்பட்டது. இந்தப் பழநி ஆலயத்தினுடைய சொந்தப் பொறுப்பிலே உருவாக்கப்பட்ட அந்த ஒரு கோடி ரூபாய் நிதியைத் தவிர, இந்த 6 கோடி ரூபாய்க்கும் பழநி ஆலயம் ஒரு கோடி ரூபாய் வழங்கியுள்ளது.



தென்பழநியும் வடபழநியும் இணைந்து நடத்தும் விழா

ஆகவே வரலாற்று சிறப்புமிக்க அந்த வைப்பு நிதியிலே இருந்து கிடைக்கின்ற அந்த வட்டித் தொகையிலே இருந்து, இன்றைக்கு ஆலயங்கள் பெறுகின்ற அந்த பயனை, கிராம மக்கள் பெறுகின்ற அந்தப் பயனை மக்களுக்கு உணர்த்துகின்ற வகையில், சில மாதங்களுக்கு முன்பு அந்த 5 கோடி ரூபாய் வைப்புநிதியிலே இருந்து கிடைத்த வட்டித் தொகையில் ஆலயங்களிலே ஒரு வேளை பூசைக்கு உதவுகின்ற அந்த நிதி உதவியை வழங்கினோம். அந்தப் பூசையை நடத்துகின்ற அர்ச்சகர்கள் வருடக் கணக்கில் சம்பளம் இல்லாமல் வறுமையோடு போராடிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையைப் போக்குகின்ற வகையில், தஞ்சைத் தரணியில் அர்ச்சகர்களுக்குப் பாக்கித் தொகையாக இருந்த ஏறத்தாழ 6 லட்ச ரூபாய்க்கு மேல் இருந்த அந்தச் சம்பள பாக்கியை வழங்குகின்ற அந்த நிகழ்ச்சியை நடத்தினோம். இன்றைக்கு இந்த திட்டத்தினுடைய 2வது நிகழ்ச்சியைத் தமிழகத்தினுடைய தலைநகரில், எந்த முருகப் பெருமானுடைய அருளாலே இந்தத் திட்டம் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ, அந்த முருகனுடைய ஆலயத்திலே, இந்த நிதியை வழங்குகின்ற விழாவும் நடைபெற வேண்டும் என்கிற உணர்வோடு, பழநி ஆலயத்தினுடைய நிதியிலே இருந்துவழங்கப்படுகின்ற அந்த நிதியளிப்பு விழாவை இங்கே வடபழநியாண்டவர் ஆலயத்திலே நடத்த வேண்டும் என்று விரும்பி, இந்த நிகழ்ச்சியை இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறோம். இதைத் தவிர, புகழ் மிக்க வடபழநி ஆலயத்தின் சார்பில் எனக்கு முன்னாலே அறநிலையத்துறையின் ஆணையர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல 30 லட்ச ரூபாயில் புதிய கட்டடங்களைக் கட்டுவதற்காக இன்றைக்கு அடிக்கல் நாட்டப் பட்டிருக்கிறது. அதைப் போல கட்டி முடிக்கப்பட்டிருக்கின்ற அருணகிரி நாதர் மண்டபத்தை இன்றைக்குத் திறந்து வைத்திருக்கிறோம். கட்டப்பட இருக்கிற மண்டபங்களில் 10 லட்ச ரூபாயிலே கல்யாண மண்டபமும் ஆறு இலட்சத்தி இருபத்தையாயிரம் ரூபாயிலே கந்தர் அநுபூதி மண்டபமும், மூன்று இலட்சத்தி அறுபதினாயிரம் ரூபாயில் கடைநிலை ஊழியர் குடியிருப்பும், நான்கு இலட்சத்தி அறுபதினாயிரம் ரூபாயில் ஆலயப் பணியாளர் குடியிருப்பும், மற்றும்

பல அங்காடிகள் இந்த ஆலயத்தினுடைய வருமானத்தைப் பெருக்குவதற்காகக் கட்டுவதற்காகவும் ஏறத்தாழ முப்பது இலட்சத்துப் பதிமூன்றாயிரம் ரூபாயில் இன்றைக்கு இங்கே திட்டங்களைத் தொடங்கி வைத்து இருக்கிறோம். இந்த இரு நிகழ்ச்சிகளையும் பழநி ஆலயத்தினுடைய சார்பிலே நடைபெறுகின்ற அந்த நிகழ்ச்சியையும் இந்த ஆலயத்திலேயே நடத்துவதற்கு மனமுவந்து அன்போடு ஒப்புதல் அளித்த பழநி ஆலயத்தினுடைய தக்கார் அருமை நண்பர் பொன்னுசாமி அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இல்லையானால் கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பது என்பதைப் போல, பழநி ஆலயத்திலே ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதியாக வைத்து அதிலே கிடைத்திருக்கின்ற 17 லட்சம் ரூபாயிற்கு மேற்பட்ட தொகையை வழங்குகின்ற விழாவையும் பழநியில் தானே நடத்த வேண்டும். இன்னொரு ஆலயத்திலே போய் எப்படி நடத்துவது என்று அவர்கள் கேட்கவில்லை. காரணம் அதைத்தான் நம்முடைய ஆணையர் அவர்கள் முதலிலே குறிப்பிட்டார்கள். நம்முடைய தக்கார் பொன்னுசாமி அவர்கள் மிகச் சிறந்த முருக பக்தர். முருக பக்தர் என்று சொன்னால் அவர்கள் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். சேலம், பெரியார், கோவை மாவட்டங்களிலே வாழ்கின்ற கொங்கு வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த குடிமக்கள், பழநி ஆலயத்திற்குத் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்ற பக்தர்கள். அப்படி குடும்பம் குடும்பமாக, காலகாலமாக பழநிக்குத் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்ற கொங்கு வேளாளர் குடும்பத்திலே பிறந்த அருமை நண்பர் பொன்னுசாமி அவர்கள், ஒரு முருகருடைய ஆலயத்தில் இந்த நிகழ்ச்சி இங்கே நடைபெறுகின்றது என்பதை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல. அவர்கள் சென்னையில் வந்து வாழத் தொடங்கிய காலத்தில் அல்லது படிக்கத் தொடங்கிய காலத்தில் இந்த வடபழநி ஆலயத்தில் காலை 5 மணிக்கு நடைபெறுகின்ற அந்த விடியற் காலை பூசைக்கு வந்திருந்து வணங்கிவிட்டுச்செல்லுகின்றவர் நம்முடைய பொன்னுசாமி அவர்கள். ஆகவே அவர் அப்படி ஈடுபாடு கொண்டு விளங்குகின்ற ஒரு ஆலயத்தில், தம்முடைய நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற ஆலயத் தொடர்பான விழாவை நடத்துவதற்கு அவர்கள் அன்போடு இசைந்திருக்கிறார்கள்.

150 கிராமக் கோயில்களுக்கு நிதி

இங்கே 150 ஆலயங்களின் திருப்பணிக்காக 15 லட்ச ரூபாயை வழங்க இருக்கிறோம். தமிழகத்தினுடைய அறநிலையத்துறை, ஏழுதுணை ஆணையர்களின் ஆளுகைக்குஉட்பட்ட பகுதியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. சென்னை துணைஆணையர் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் 20 ஆலயங்களுக்கும், திருச்சிராப்பள்ளிதுணைஆணையர் பகுதியில் 18 ஆலயங்களுக்கும், தஞ்சாவூர் துணை ஆணையர் பகுதியில் 24 ஆலயங்களுக்கும், மயிலாடுதுறை துணை ஆணையர் பகுதியில் 13 ஆலயங்களுக்கும், மதுரை துணை ஆணையர் பகுதியில் 26 ஆலயங்களுக்கும், திருநெல்வேலி துணை ஆணையர் பகுதியில் 16 ஆலயங்களுக்கும், கோயம்புத்தூர் துணை ஆணையர் பகுதியில் 33ஆலயங்களுக்கும் ஆக 150 கிராமப் புற ஆலயங்களுக்கு இந்த நிதி இன்றைக்கு வழங்கப்படுகின்றது. 150 கிராமங்களிலே இருந்து பெரியவர்கள் இங்கே வருகை தந்திருக்கிறார்கள். அவர்கள் சார்பிலே தான் மதுரை மாவட்டத்திலே இருந்து வருகை தந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த பிரமுகர் சோணை முத்துச் சேர்வை அவர்கள் இங்கே பேசினார்கள். வந்திருக்கின்ற கிராமத்துப் பெரியவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் உள்ளங்களிலே கிளர்ந்தெழுந்து கொண்டிருக்கின்ற உணர்வுகளை- அவர்கள் தெரிவிக்கின்ற பாராட்டுகளைத் தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு வழங்கவேண்டும் என்றுவிரும்பினாலும் நேரம் இல்லாத காரணத்தினாலேதான், உங்கள் எல்லோருடைய சார்பிலேயும் சோணை முத்துச் சேர்வை அவர்களை இங்கே பேசும்படி நான் கேட்டுக் கொண்டேன். ஆகவே நீங்கள் அனைவரும் எந்த உணர்வோடு தமிழகத்தினுடைய தலைநகருக்கு வந்திருக்கிறீர்கள் என்பதை நாங்கள் உணர்ந்து கொண்டிருக்கிறோம். உங்களுடைய நன்றியுணர்வைப் புரட்சித் தலைவரிடத்திலே தெரிவிப்போம் என்பதை நான் இங்கே அன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நாமும் கோடீஸ்வரர்கள் ஆகலாமே!

நாம் கோடீஸ்வரர்கள் ஆக என்ன செய்ய வேண்டும். பல மாநிலத்து லாட்டரிசீட்டு களையும் தவறாமல் வாங்குவதால் நாம் கோடீஸ்வரர்கள் ஆக முடியுமா? லாட்டரிசீட்டுக்கள் வாங்காமலே நாம் கோடீஸ்வரர்கள் ஆக வழி இருக்கிறது. அது தான் ஔவை மூதாட்டி சொன்ன நல்லவழி.

மதியாதவர்கள் வீட்டை நாமும் மதித்துச் செல்லக்கூடாது. உள்ளன்பில்லாதவர்கள் வீட்டில் நாம் உணவருந்தல் கூடாது. நல்ல குணம் உடையவர்கள் நட்பை நாம் பெற்றுக்கொள்ளவேண்டும். சொன்னசொல் காப்பதில் நாம் உறுதியாக நிற்க வேண்டும். இந்த நான்கு பண்புகளைநாம் வளர்த்து கொண்டு விட்டால் நாமும் கோடீஸ்வரர்கள்தான். இதை அறிவுறுத்தும் ஔவையாரின் அமுதமொழி இதோ:

''மதியாதார் முற்றம் மதித்தொருகால்சென்று
மிதியாமை கோடி பெறும்.
உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார்
தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்.
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்.
கோடான கோடி கொடுப்பினும் தன்னுடைநா
கோடாமை கோடி பெறும்.

புரட்சித் தலைவர் ஆட்சியின் புரட்சி

இந்த ஏழு கோடி ரூபாய் திட்டம் என்பதைப் பார்ப்பவர்கள் பலர் ஏதோ சாதாரணத் திட்டம் என்று கூடச் சொல்லுகிறார்கள். தமிழகத்தினுடைய அற நிலையத் துறையினுடைய வரலாற்றில் ஒரு உண்மையை ஒரு செய்தியை உங்களுக்குத் தெரிவித்தாக வேண்டும். நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நேரத்தில் தமிழகத்திலே இருக்கின்ற ஆலயங்கள் அனைத்திலும் ஏறத்தாழ 30000 ஆலயங்கள் அறநிலையத் துறையின் ஆணைக்கு உட்பட்ட ஆலயங்கள் — இந்த ஆலயங்கள் அனைத்திலும் 77 ஆம் ஆண்டில்

அந்த ஜூலைத் திங்கள், ஆலயத்தினுடைய கணக்குகள் தொடங்குகின்ற நிதி ஆண்டில், இருப்பிலே வைப்புத் தொகையாக இருந்த தொகை சுமார் நான்கரை கோடி ரூபாய்கள் தான் என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக, பல நூறு ஆண்டுகளாக, மன்னர்கள் ஆண்டு, அதற்குப் பிறகு



கோவை அருள்மிகு கோணியம்மன் ஆலயத் தேர்த் திருவிழா நிகழ்ச்சியை அறநிலையத் துறை ஆணையர் திரு க. சுந்தரமூர்த்தி ஐ. ஏ. எஸ். அவர்கள் தொடக்கி வைக்கிறார். ஆலயத்தக்கார் திருமதி பங்கஜாட்சி சுப்பையன் உடன் இருக்கிறார்.

ஜமீன்தார்கள், சமஸ்தானாதிபதிகள், வெள்ளைக்காரர்கள், ஜாகீர்தாரர்கள் என்று பல்வேறு ஆட்சி முறைகள் தமிழகத்திலே ஏற்பட்டதற்குப் பிறகும், நீண்ட காலமாக நம்மாலே சேர்க்க முடிந்த தொகை நான்கரை கோடி தான். ஆனால் இன்றைக்கு ஒரு ஏழு கோடி ரூபாயை ஒரு திட்டத்திற்காக வைப்பு நிதியாகச் சேர்க்க முடியும் என்பதை புரட்சித்தலைவருடைய ஆட்சியிலே நாம் நிறைவேற்றிக் காட்டி இருக்கிறோம். இன்றைக்கு ஆலய நிலங்களைக் குத்தகைக்கு வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் தர வேண்டிய பாக்கித் தொகை ரூபாய் 25 கோடியிலிருந்து 30 கோடியாக உயர்ந்திருக்கின்றது. அதைப் போல கட்டடங்களை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள், வாடகைத் தொகையைப் பாக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவ்வளவு சங்கடங்களுக்குப் பிறகும், நம்முடைய ஆலயங்களினுடைய திட்டங்கள், திருப்பணிகள் கோடிக் கணக்கான ரூபாய்கள் மதிப்பில் நடத்தி முடிக்கப்பட்டதற்குப் பிறகும், இன்றைக்கு நம்முடைடைய தமிழகத்தினுடைய ஆலயங்களில் இந்த 7 கோடி ரூபாயை வாங்கியதற்குப் பிறகும், இன்றைக்கு ஆலயங்களில் சேர்த்து வைத்திருக்கின்ற தொகை உத்தேசமாக சுமார் 25 கோடி ரூபாய் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எப்படி முடிந்தது.? இது எப்படி நடந்தது? இது தான் புரட்சித்தலைவருடைய ஆட்சியின் புரட்சி என்பதை நீங்கள் உணர்ந்து கொண்டாக வேண்டும்.

தொட்டதெல்லாம் துலங்கும்

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்திலே எந்த இலட்சத்திற்காக, மனித சமுதாயத்தில் ஆலயங்கள் தோற்றுவிக்கப்பட்டனவோ, அந்த அறநிலை பிறழாமல் நடத்த வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நிர்வாகத்தை நடத்தத் துணிந்தார்கள். நடத்துவதற்குச் சட்டங்களைத் தேர்தெடுத்தார்கள். அதனுடைய விளைவாக ஆலய நிதிகள் பாதுகாக்கப்படுகின்றன. இவை எல்லாவற்றையும் விட மக்கள் ஆலயங்களுக்குச் சென்று தொழ வேண்டும். அவர்கள் ஆன்மீக உணர்வைப் பெற வேண்டும் என்கின்ற அந்த உணர்ச்சி, ஒரு மிகப் பெரிய இயக்கமாக, தமிழகத்திலே இன்றைக்குத் தோன்றியிருக்கின்றது. இதன் காரணம் என்னவென்பதை நான் இங்கே விரிவாக விளக்கிக் கொண்டிருக்கப் போவதில்லை. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் இங்கே மனம் திறந்து பாராட்டினார்கள். அவர் மனம் திறந்து பாராட்டினார் என்று நான் சொல்வதற்குக் காரணம், அவர் எதையுமே மனம் திறந்து பேசுகிறவர். எந்தக் கருத்தை அவர் உள்ளத்தில் நினைத்தாலும் அதை அப்படியே கொட்டிவிடுபவர். நல்ல கருத்தானாலும் சரி, அல்லது கோபத்திலே வருகின்ற கருத்தானாலும் சரி, அவர் எதையும் உள்ளத்தில் மறைத்து வைக்கத் தெரியாதவர். அதனால்தான் புரட்சித் தலைவருடைய ஆட்சியை இன்றைக்கு அவர்கள் பாராட்டினார்கள். எந்த நேரத்திலே எந்தத் துறையைப் பாராட்டுகிறார்கள் என்பது அல்ல. அந்தந்தத் துறையிலே செல்லுகிற பொழுது, புரட்சித் தலைவருக்குப் பாராட்டு கிடைக்கின்றது. இன்று நான் இந்த நிகழ்ச்சிக்குச் சற்று தாமதமாக வந்ததற்குக் காரணமே திருவொற்றியூரிலே ஒரு திரையரங்கத்தைத் தொடக்கி வைத்துவிட்டு வந்தேன். ஆகவே அந்தத் துறைக்குள்ளே போகிற போது புரட்சித் தலைவருடைய ஆற்றலை, சிறப்பை அந்தத் துறையினர் பாராட்டுகிறார்கள். நாளைக்குத் திருநெல்வேலியில் பால்வளத்துக்காக ஒன்றரை கோடி ரூபாயிலே ஒரு

தொழிற்சாலையைத் திறக்க இருக்கிறார்கள். அங்கே போகிற பொழுது, தமிழகத்தினுடைய விவசாயப் பெருங்குடி மக்கள், தமிழகத்திலே நம்முடைய புரட்சித் தலைவருடைய ஆட்சியில் பால் வளத்துறை எவ்வளவு சிறப்படைந்திருக்கிறது, வளர்ச்சி பெற்றிருக்கின்றது என்பதைப் பாராட்டுகிறார்கள். இங்கே நம்முடைய நகர மக்கள் விழித்தெழுந்தால் கதவைத் தட்டிக் கொண்டு வருகின்ற பால் வளத்துறையின் பெருமையைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போல வருகிற 25 ஆம் தேதி இங்கே சென்னை மணலியில் ஏறத்தாழ ஒரு 10 கோடி ரூபாய் செலவிலே நம்முடைய நாட்டிலே வியக்கின்ற அளவுக்கு இயற்கை தந்திருக்கின்ற செல்வம் — அந்தக் கருங் கற்கள்-அந்தக் கருங் கற்களைப் பாலீஸ் செய்து வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்ற ஒரு மிகப் பெரிய தொழிற் கூடத்தைத் திறந்து வைக்க இருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு திட்டத்தை அவர்கள் தொடங்கி வைக்கிற பொழுதும், அந்தந்தத் துறையினர், அந்தந்தப் பிரிவினர் புரட்சித் தலைவரைப் பாராட்டுகிறார்கள். இவர் தொட்ட இடமெல்லாம், இவர் எந்தெந்தத் துறைகளிலே கவனத்தைச் செலுத்துகின்றாரோ. அந்தத் துறைகள் எல்லாம், சிறக்கிறது மணக்கிறது என்று மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போல அறநிலையத் துறையைப் பற்றி இங்கே பெருமக்கள் நீங்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறீர்கள்!.

அறநிலையத்துறை எவ்வளவு சிறப்படைந் திருக்கிறது

இன்றைக்கு இந்த ஏழு கோடி ரூபாய்த் திட்டத்தில் ஒரு மிகப் பெரிய திட்டமாக-தலையாயத் திட்டமாகத் திகழ்வது ஐந்து கோடி ரூபாய் திட்டம். அதிலே இன்றைக்குச் சுமார் 55 லட்ச ரூபாய், வட்டியாகச் சேர்த்து வைத்திருக்கிறோம். அதைத்தான் நம்முடைய ஆணையர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே 1100 ஆலயங்களைத் தேர்ந்தெடுத்து அவைகள் தொன்மையான ஆலயங்களா என்று பார்த்து, ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்டு, அல்லது சில நூறு ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்டு, பாடல் பெற்ற தலமாக விளங்கிக் கொண்டு, ஆனால் அவை பராமரிப்பதற்குக் கவனிப்பதற்கு நாதியற்று விளங்கிக் கொண்டிருக்கின்ற ஆலயங்களாக இருக்குமானால் அத்தகைய 1100 ஆலயங்களைத் தேர்ந்தெடுத்து இந்த 55 லட்ச ரூபாயை வழங்க இருக்கிறோம். அதிலே முதல் தவணையாகத் தஞ்சையில் 300 ஆலயங்களுக்கு 15 லட்ச ரூபாயை வழங்க இருக்கிறோம். அதைத் தொடர்ந்து தென் மாவட்டங்களுக்காக மதுரையிலும், மேற்கு மாவட்டங்களுக்காக கோவையிலும் நடத்த இருக்கின்றோம். அதைப் போலவே இன்னொரு ஒரு கோடி ரூபாய், ஆலயங்களிலே பணி புரிகின்ற அலுவலர்களுக்கு உதவி புரிவதற்காக அதிலே சுமார் 12 லட்ச ரூபாயைச் சேர்த்து வைத்திருக்கிறோம். நம்முடைய ஆலய அலுவலர்கள் 100 ரூபாயிலே இருந்து தொடங்கி 250 ரூபாய் வரை அவசர உதவியாகவும், தேவையானால் கடனாகவும், அவர்கள் வீட்டிலே நடக்கும் சிறப்பு நிகழ்ச்சிகள், திருமண நிகழ்ச்சிகள் மற்றும் பல நிகழ்ச்சிகளுக்கு உதவிகள் பெறப் போகிறார்கள். ஆயிரக் கணக்கான அலுவலர்களுக்கு இன்றைக்கு அத்திட்டத்தால் ஆண்டு தோறும் 12 லட்ச ரூபாயில் உதவி செய்ய இருக்கிறோம். இந்த மூன்று திட்டங்களாலே தமிழகத்தினுடைய அறநிலையத்துறை எவ்வளவு சிறப்பு அடைந்திருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள முடிகிறது.

புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள இணை ஆணையர் பதவிகள்

அதைப் போல அறநிலையத் துறையினுடைய நிர்வாகம் இன்றைக்கு எவ்வளவு விரிவடைந்திருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே துணை ஆணையர்கள் தமிழகத்தினுடைய பல் வேறு பகுதிகளிலே இருந்து வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட துணை ஆணையர்கள், இது வரை அவர்கள் இந்தத் துறையிலே பணி புரிந்து, கடைசியாக அவர்கள் ஓய்வு பெறுகிற 58 வயதுவரை, இந்தத் துணை ஆணையர் பதவியை விட வேறு பதவி உயர்வைப் பெற முடியாத நிலையில் இருந்து கொண்டு இருந்தார்கள். மனம் நொந்து கொண்டு இருந்தார்கள்! எங்களுக்கு வாழ்க்கையிலே ஒரு பதவி உயர்வு கிடைக்காதா? இந்த 'டெபுடிகமிஷனர் - துணை ஆணையர் என்கின்ற அந்த உயர்வோடு நின்று விடுகிறதே! அதற்கு மேலே இருக்கின்ற ஆணையர் பதவியை ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரிக்குத் தானே தருகிறார்கள்! எங்களுக்குக் கிடையாதா என்று அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

✓ இவைகளைப் பாடியவர் யார்?

நாம் வாழ்க்கையில் பின்பற்றத்தக்க பொன் மொழிகள் சில கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. உங்கள் சமய அறிவினைக் காணக் கேட்கப்படும் ஒரு கேள்வி! இவைகளைப் பாடியவர் யார்?

நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே.
-யார் பாடியது?

மந்திர மாவது நீறு
வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு
துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு
சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
திருஆல வாயான் திருநீறே.
-யார் பாடியது?

வாழ்வாவது மாயம்இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறி தான்
தாழாது அறஞ்செய்மின்தடம் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான் திருக்கேதாரம் எனீரே.
-யார் பாடியது?

வேண்டத் தக்கது அறிவோய்நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்க் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.
—யார்பாடியது?

பாடியவர் யார் எனத் தெரியாவிடில்
பக்கம் 25ஐப் பாருங்கள்.

இன்றைக்கு அற நிலையத் துறையினுடைய நிர்வாகம் விரிவடைந்து விட்ட காரணத்தினாலே புரட்சித் தலைவர் அவர்கள், இந்தத் துணை ஆணையர் பதவியிலே இருப்பவர்கள், மேலே பதவி உயர்வு பெறுவதற்காக இணை ஆணையர்கள் என்ற இரண்டு பதவிகளை இன்றைக்கு உருவாக்கி இருக்கிறார்கள். இதைத் தெரிவித்தால் நம்முடைய துணை ஆணையர்கள் எல்லாம் மகிழ்ச்சி அடைவார்கள் என்கிற காரணத்தினாலேதான் இதை நான் தெரிவிக்கின்றேன். காரணம் நான் அவர்களிடத்திலே கொஞ்சம் கடுமையாக — கோபப்பட்டுக் கொண்டு அல்ல — கொஞ்சம் வேகமாகக் கடுமையாகப் பேசி இன்னும் நீங்கள் இந்த அறநிலையத்துறை நிர்வாகத்தை அக்கறை காட்டிக் கவனிக்க மறுக்கிறீர்களே என்று கோபித்துக் கொள்கிற நேரத்தில், அவர்கள் எங்களுக்கு முன்னாலே அவர்களுடைய மனக்குறையைத் தெரிவிக்கவில்லை என்றாலும், பக்கத்திலே தனியாகப் போய் விசாரிக்கிறபொழுது, பேசுகிறபொழுது ''நாங்கள் என்ன செய்து என்ன பயன்? ஓடி ஓடித் தேடித் தேடி பாடுபட்டாலும் எங்களுக்கென்ன பதவி உயர்வா கிடைக்கப்போகிறது?'' என்று அவர்கள் வருத்தப்பட்டுக் கொள்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்ட காரணத்தால் தான், இன்றைக்கு உங்களுக்கு இரண்டு இணை ஆணையர்கள் பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆன்மீகம் அழிக்க முடியாத நெருப்பு

அப்படிப்பட்ட துணை ஆணையர்களை நான் அன்போடு கேட்டுக் கொள்வேன். நம்முடைய அறநிலையத்துறை என்பது ஒரு காலத்திலே கவனிப்பாரற்ற துறையாக இருந்தது. இன்னொரு காலத்திலே யாரோ பக்தர்கள் ஆலயத்திற்குச் செல்லுகிறவர்கள், அவர்கள் எல்லாம் மூடநம்பிக்கையிலே அக்கறை உள்ளவர்கள், இந்த உலகத்தினுடைய வளர்ச்சியைத்தெரிந்து கொள்ளாதவர்கள் - அவர்களுக்கு மாத்திரமே தொடர்பு என்று ஒதுக்கிவைக்கப்பட்ட துறையாகவும் இது இருந்தது. ஒரு காலத்திலே புறக்கணிக்கப்பட்ட துறையாக இருந்தது. இன்னொரு காலத்திலே ஒதுக்கிவைக்கப்பட்ட துறையாகவும் இருந்தது. இன்னும் சொல்லப்போனால் தீண்டத்தகாத துறையாகவும் இருந்தது. இப்படிப் வெள்ளைக்காரன் காலத்திலே இருந்து விடுதலைப் பெற்றதற்குப்பிறகு நமக்கு முன்னாலே இருந்த ஆட்சிக் காலம் வரை, மூன்று கால கட்டங்களை நம்முடைய அறநிலையத்துறை கண்டிருக்கிறது. அதனுடைய விளைவாகத்தான் தமிழகம் ஏதோ ஒரு அடிப்படையிலேயே மாறிவிட்டதோ, ஆலயங்கள் எல்லாமே மூடப்பட்டுவிடுமோ, ஆன்மீக உணர்வே அற்றுப் போய்விடுமோ, இந்து மதமே இறந்து விடுமோ என்று தெரியாதவர்கள் சிலபேர் எண்ணுகின்ற சூழ்நிலையும் வந்தது. நீறுபூத்த நெருப்பாக இந்த இயக்கம் இருக்கிறதே தவிர, இது அழிக்க முடியாத நெருப்பு என்பதைப் பலபேர் தெரிந்து கொள்ளவில்லை. புரட்சித் தலைவர் அதைக் கொஞ்சம் விசிறி விட்டார்., காற்றாக மாறி அந்த சாம்பலைப் போக்கினார். இன்றைக்கு அந்தக் கனல் கொழுந்துவிட்டு எரிகிறது. அது இன்றைக்குப் பேரியக்கமாக மாறி இருக்கிறது.

புதிய ஆணையர் சிறந்த நிர்வாகி

அதனுடைய விளைவுதான் இங்கே நம்முடைய வடபழநி ஆலயம் எப்படிப்பட்ட வருமானத்தைப் பெறுகிறது என்ற கணக்கை நம்மாலே பெற முடிகிறது. 30 லட்ச ரூபாய்க்கு இந்த ஆலயம் திட்டமிடுகிறது., இனிமேல் இதை வசூலிக்கலாம் என்கிற தைரியத்திலே கூட அல்ல; தன்னிடத்திலே இருக்கிற நிதியிலிருந்தே மக்கள் தருகிற நிதியில் இருந்தே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று அவர்கள் இவ்வளவு தைரியமாக இந்தத் திட்டத்தைத் தொடங்குகிறார்கள் என்றால், மக்கள் எந்த அளவிற்கு ஈடுபாடு கொண்டு விளங்குகிறார்கள் என்பதை நாம் தெரிந்து கொண்டாக வேண்டும். ஆகவே மக்களுடைய உணர்வை மதித்து நீண்ட நெடுங்காலமாக சமுதாயத்தினுடைய பெருமையை, அறத்தை, நல்லறத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிற ஆலயத்தைக் காப்பாற்ற வேண்டிய மிகப் பெரிய பொறுப்பை நம்முடைய துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், நிர்வாக அலுவலர்கள்-அவர்களுக்கு இருக்கின்ற சட்டபூர்வமாக ஆற்றவேண்டிய கடமைகளை மாத்திரம் அல்ல, தார்மீக உணர்வோடு சத்திய உணர்வோடு கூடிய கடமைகளையும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்! அவற்றை யெல்லாம் முடிந்த அளவிற்கு ஆற்ற வேண்டுமென்று நான் அன்போடு உங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது பார்த்துக் கொள்கிறீர்கள்! இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால் நூற்றுக்குப் பத்துப் பேர், பதினைந்து பேர் என்கிற அளவிலேதான் சுறுசுறுப்பைக் காட்டுகிறீர்கள்! அக்கறை காட்டுகிறீர்கள். நமக்கு என்ன வந்தது என்று கைகழுவி விட்டுப் போகிற உணர்வு ஒருகாலத்திலே வளர்ந்து கொண்டு இருந்தது. அது இன்றைக்கும் மாற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே நான் இந்த அதிகாரிகள் அனைவரையும் இந்த ஆலயத்தின் சந்நிதியில் வேண்டிக் கேட்டுக் கொள்வேன்; நம்முடைய ஆணையர் அவர்கள் புதிதாக வந்திருக்கிறார்கள். அவர்கள் மிகச் சிறந்த நிர்வாக அனுபவம் பெற்றவர்கள். இதிலே மிகுந்த அக்கறை கொண்டவர்கள், முன்னாலே இருந்த ஆளுடையபிள்ளை அவர்கள் ஒரு மிகச் சிறந்த நிர்வாகத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதற்கு முன்னாலே இருந்த யு.சுப்பிரமணியம் அவர்கள் பாழடைந்துபோய் இருந்த நிர்வாகத்தைச் சீர்படுத்தி விட்டுச் சென்றார்கள். தொடர்ந்து வளர்ந்து கொண்டு வருகின்ற இந்த நிர்வாகம், நம்முடைய ஆணையர் சுந்தரமூர்த்தி அவர்கள் காலத்தில் மிகச்சிறந்து விளங்கவேண்டும், அதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தேடிக் கண்டுபிடித்த திட்டம்

இங்கே இந்த ஏழுகோடித் திட்டம் பற்றிய பல்வேறு உணர்வுகளை நம்முடைய நண்பர்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். நம்முடைய ஆலயத்திலே பணியாற்றுகிறவர்கள் எவ்வளவு ஊதியம் பெறுகிறார்கள்! அவர்களுக்கு என்ன சம்பளம் வருகிறது! அடிப்படைச் சம்பளம் குறைவாக இருக்கிறதே என்று அவர்கள் கேட்பது நமக்குப் புரிகிறது! அடிப்படைச் சம்பளம் குறைவாகஇருக்கிறது! ஆனால் அதே நேரத்தில் மக்களோடு தொடர்பு கொள்கிற ஒரு பணியிலேயும் நாம் ஈடுபட்டு இருக்கிறோம். அதற்கு ஏற்றாற்போல் நம்முடைய பணிகளை நாம் அமைத்துக் கொண்டாக வேண்டும். ஆலயங்களினுடைய வருமானம் கூடினால் உங்களுடைய வருமானம் கூடும். வரப்புயர நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும்; இதுதான் தத்துவம். நாம் ஈடுபட்டிருக்கின்ற இந்தப் பணியில் நம்மை இதய சுத்தியோடு ஈடுபடுத்திக் கொண்டால் அதற்குக் கிடைக்கிற பலன் நமக்கும் கிடைக்கும். ஆண்டவனுக்குப் பணிபுரிகின்ற அர்ச்சகர்கள் இன்றைக்கு இங்கே ஒரு வேண்டுகோளை-ஒரு பத்து தீர்மானங்களை என்னிடத்திலே தந்திருக்கிறார்கள்.

மலைக் கோயில்களுக்குப் பாதை வசதிகள்

மருதமலைக் கோவிலுக்குப் போவதற்குப் படிக்கட்டுகள் இருக்கின்றன. இடை இடையே தங்கிப்போக நிழல் வசதியும் இருக்கின்றன. இரண்டரை கிலோ மீட்டர் நீளத்திற்கு அங்குச் சாலை வசதி போடப்பட்டு வாகனங்கள் போய்வருகின்றன.

மற்ற மலைக் கோவில்களுக்கும் இப்போது சாலை வசதி போடப்பட்டு வருகிறது. திருச்செங்கோடு கோவிலுக்கு 60 லட்சம் ரூபாய் செலவில் மலைப்பாதை அமைக்கும்வேலை தொடங்கப்பட்டு வேலையும் பாதி முடிந்துவிட்டது. அதைப்போல சோளிங்கர் கோவிலுக்கும் மலைப்பாதை போடும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பல மலைக் கோயில்களுக்குப் பாதைகள் போடப்பட்டு வருகின்றன.

—மாண்புமிகு அமைச்சர் ஆர்.எம்.வீ. அவர்கள் சட்டமன்றத்தில் கூறியது.

அதிலே ஒன்றிரண்டு தீர்மானங்கள் அரசின் சார்பில் நாங்கள் ஏற்கெனவே பரிசீலித்துக் கொண்டிருக்கிற தீர்மானங்கள் தான். உங்களுடைய நியாயமான வேண்டுகோள்கள் அரசாங்கத்தினுடைய பரிசீலனையிலே இருக்கிறது என்பதையும் நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்வேன்! அனைத்து அர்ச்சகர்களுக்கும் நெல் மற்றும் ரொக்க சம்பள பாக்கிகள் உடன் வழங்கப்படவேண்டும், இது ஒரு தீர்மானம். வழங்கவேண்டும் என்பதிலே யாருக்கும் ஆட்சேபனை இல்லை; ஆனால் ரொக்கம் எங்கே இருக்கிறது, நெல் எங்கே வருகிறது என்பதுதான் பிரச்சினை. நெல்லைத் தர வேண்டிய குத்தகைதாரர் நெல்லைத் தர மறுக்கிறார்., அல்லது ரொக்கமாகத் தரவேண்டிய குத்தகைதாரர், ரொக்கத்தையும் தர மறுக்கிறார்., ஆனால் ஆலயத்திலே நீங்கள் பணிபுரிந்துகொண்டு இருக்கிறீர்கள்! உங்களுக்கு உரிய பாக்கிகளை எல்லாம் எப்படித் தருவது? எங்கே இருந்து தருவது என்று தேடிய பிறகுதான் இப்படியொரு திட்டத்தையே கண்டுபிடித்திருக்கிறோம். புரட்சித் தலைவர் அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஆகவே நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள். இல்லையென்று சொல்லவில்லை., இன்றைக்கு ஒரு சில ஆலயங்களிலே இருக்கிற அர்ச்சகர்களைப் பார்த்தால் இவர்கள் எல்லாம் இலட்சாதிபதிகளாக இருப்பார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் தமிழகத்திலே இருக்கிற 99 சதவீத ஆலயங்களில் அர்ச்சகர்கள் அன்றாடம் காய்ச்சிகளாக இருக்கிறார்கள். அர்ச்சகர்கள் மாத்திரம் அல்ல,. ஓதுவாமூர்த்திகள்., நாதஸ்வரக் கலைஞர்கள்., அடிப்படைப் பணியாளர்கள்,. இவர்கள் எல்லோரும் அடிப்படைத் தேவைகளுக்குக் கூட முடியாமல், சம்பளம் கிடைக்காமல் திண்டாடுகிறார்கள்., ஆகவே அருள் கூர்ந்து ஆலயங்கள் தழைக்கவேண்டுமானால், ஆன்மீகம் நிலைக்கவேண்டுமானால், இந்த அறநெறி நம்முடைய நாட்டிலே இன்னும் வளரவேண்டுமானால், ஆலயங்களுக்கு வருகிற பக்தர்கள் மாத்திரம் அல்ல; ஆலயங்களினுடைய சொத்துக்களை அனுபவிக்கிறவர்களும் இதற்குக் கருணை காட்ட வேண்டும். அவர்கள் உள்ளத்திலே நல்ல உணர்வு தோன்றியாக வேண்டும். விளையவில்லையானால் உங்களைக் கொடுக்கவேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை; விளைந்தால் அருள்கூர்ந்து கொடுங்கள். எந்தெந்த கிராமங்களிலோ இருந்து இங்கே வந்திருக்கின்றார்களே பெரியவர்கள், ஒரு பத்தாயிரம் ரூபாய் நிதியைத் திரட்ட முடியாமல், பாதியோடு நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்ற ஆலயத் திருப்பணியை முடிப்பதற்குத் தான், இத்தனை மைல் கடந்து இந்தத் தொகையை வாங்க வந்திருக்கிறார்கள்! ஆனால் அறநிலையத் துறை அல்லது அரசாங்கம் மாத்திரமே கொடுத்து எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றிவிட முடியாது. அதிலும் இந்த ஆலயப்பணி என்பது மக்கள் இரண்டறக் கலந்து நிறைவேற்ற வேண்டிய பணியாகும். மக்களுக்கு ஆலயப்பணிகளிலே அக்கறை இருப்பதை நாம் உறுதிப் படுத்தியாக வேண்டும். மக்கள் தொடர்பு இல்லாமல் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் பலனே இல்லை. ஆலயம் கட்டுவது என்பது ஆலயம் கட்டுகிற திருப்பணி மாத்திரம் அல்ல; இதற்குப் பின்னாலே இருக்கின்ற மிகப் பெரிய உணர்வுகளை, வரலாற்றுண்மைகளை அருள்கூர்ந்து மறந்து விடாதீர்கள். ஆகவே நாம் அப்படிப்பட்ட உணர்வை, உணர்ச்சியை இந்தத் திருப்பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் மக்களிடம் உண்டாக்கியாக வேண்டும். இதைப்போன்ற உணர்வுகளை நம்முடைய அர்ச்சகர்கள் சங்கத்தினர் இங்கே தந்திருக்கின்றார்கள். ஆத்மப் பூர்வமாக இறைவனுடைய மந்திரங்களை ஓதி ஓதிப் பாண்டித்தியம் பெற்ற அர்ச்சகர்களை வயதைக் காரணம் காட்டி ஓய்வு பெறச் செய்யக்கூடாது என்றும் கேட்டிருக்கிறார்கள். நான் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்வேன்., சாம்பசிவ சிவாச்சாரி அவர்களையும் கேட்டுக் கொள்வேன்! வயது முதிர்ந்த காரணத்தால் அவர்களைப் பணியிலிருந்து ஓய்வுபெறச் செய்யாமல் இருப்பதைப் பற்றிநாம் ஆலோசிக்க முடியும். அதைப்பற்றி அரசு ஒருமுடிவெடுத்து அமுல்படுத்துவது பற்றிக் கூடச் சொல்ல முடியும். ஆனால் வயது முதிர்ந்தவர்கள் என்கின்ற காரணம்கூட அல்ல, அர்ச்சகர்களில் எத்தனைப் பேர் முறையாக அந்தப் பணியில், இதயசுத்தியோடு நல்ல ஒழுக்கத்தோடு இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அந்த அர்ச்சகர்கள் சங்கம் கவனிக்க வேண்டும். கண்காணிக்கவேண்டும். ஆலயத்திலே அர்ச்சகர்களால் சொல்லப்படக்கூடிய மந்திரங்கள் முறையாகச் சொல்லப்படுகின்றனவா, அவர்களுக்கு முறையாக மந்திரங்கள் கற்றுத் தரப்படுகின்றனவா என்பதையும் அர்ச்சகர் சங்கங்கள் கண்காணித்தாகவேண்டும். நம்முடைய ஆலய வழிபாட்டு முறைகள் மற்றவர்கள் கேலியாகப் பேசுவதற்கு இடமாகி விடக்கூடாது. அந்த முயற்சிக்கு நம்முடைய அர்ச்சகர் சங்கங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுமானால் வயதினைக் காரணம் காட்டி அர்ச்சகர்களுக்கு ஓய்வளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்களிக்க அரசாங்கம் - அறநிலையத்துறை தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அச்சாணிகள் அடித்தூண்கள்

இங்கே இன்றைக்கு வடபழநி ஆண்டவர் ஆலயப்பணியாளர்களின் குடியிருப்புக் கட்டுமானப் பணிக்கு கால்கோள் நாட்டப்பட்டுள்ளது. அப்பணி முடிக்கப்படும்போது, ஆலயப் பணியாளர்களில் யார் யாருக்கு முன்னுரிமைதந்து குடியிருப்புகள்

வழங்கப்பட வேண்டும் என்ற என் கருத்தையும் தெரிவிக்க விரும்புகின்றேன். அவசரமாக இரவு நேரத்திலும் விடியற்காலத்திலும் அழைக்கிறபோது உடனடியாக வந்து தீரவேண்டிய பணியாளர்கள்- அவர்களுக்கு முதலிடம் தந்தாக வேண்டும். அடுத்து முன்னுரிமை ஏழை அர்ச்சகர்களுக்குத் தந்தாக வேண்டும். இதை நான் கோடிட்டுக் காட்டியிருக் கிறேன். ஏழை அர்ச்சகர்களுக்குத் தந்தாகவேண் டும். அதைப் போல நாதஸ்வரக் கலைஞர்கள், தவில் கலைஞர்கள், ஓதுவா மூர்த்திகள் இவர்கள் எல்லாம் இன்றைக்கு அனாதைகளைப் போல, பல ஆலயங்களிலே விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை எல்லாம் காப்பாற்றினால்தான் ஆல யம் நிலைக்கும், தழைக்கும், இந்த ஆன்மீகம்வள ரும். இவர்கள் தான் அச்சாணிகள்! இவர்கள்தான் அடித்தூண்கள்! இவர்களை விட்டுவிட்டால் நம் முடைய சமயமும் வளராது, நம்முடைய ஆன் மீகமும் பிழைக்காது. தேவாரம் இல்லையானால் ஆன்மீகம் எங்கே? ஏன் தமிழ்தான் எங்கே? தேவா ரம் இல்லையானால் தமிழ்மொழி என்றுசொல்லு வதற்கு இன்றைக்கு எந்த இலக்கியம் நமக்குக் கிடைக்கும்? ''நாளெல்லாம் இசைபாடித் தமிழ் வளர்த்த ஞானசம்பந்தர்'' என்று பாராட்டுகின் றோமே! 1300 ஆண்டுகளுக்கு முன்பு அன்றைக்கே இந்தத் திருமுறைகளைப் பாடியல்லவா தமிழை வளர்த்திருக்கிறார்கள்! அதனுடைய தொடர்பாக வழிவழியாக அல்லவா தமிழை வளர்த்துக் கொண் டிருக்கிறார்கள்! ஆகவே அந்த ஓதுவார்களை நாம் வாழவைத்தாக வேண்டும்! நல்ல ஓதுவாமூர்த்தி களை நாம் உருவாக்கியாக வேண்டும்! நாதஸ்வர கலைஞர்களை வளர்த்தாக வேண்டும். தவில் கலைஞர்களை உருவாக்கியாக வேண்டும். இந்தக் கலைகள் எல்லாம் காப்பாற்றப் படாமல் அழிந்து விடுமானால் இவற்றோடு ஆன்மீகமும் சமயமும் அழிந்துவிடும். அதனையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். சமயமும் ஆன்மீகமும் வளர்ந்தால் அது மனிதனையும் வளர்த்துக் கொண்டு உயரு கின்றது. இது உயர்கிறபோது மனிதனை விட்டு விட்டு உயர்வதில்லை. மனிதன் உயரவேண்டுமா னால் சமயமும் உயர்ந்தாகவேண்டும். அதைத்தான் இங்கே டாக்டர் சௌரிராஜன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆலய வழிபாடு என்பது ஏதோ பெயருக்காக மாத்திரம் செய்யப்படுகிற வழிபாடு அல்ல. மனிதனை மனிதனாக மாற்றுகின்ற வழி பாடுதான் ஆலய வழிபாடு. அதுதான் சமய நோக் கம். அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் இடை யிலே நாம் தடுமாறியிருக்கிறோம். அதிலே சங் கடங்கள் வந்திருக்கின்றன. அல்லது சூழ்ச்சிகள் பிறந்திருக்கின்றன. சொந்தச் சுயநலவாதிகள் உள்ளே நுழைந்திருக்கக் கூடும். அதனாலே இத னுடைய மொத்தத் தன்மையும் கறைபட்டுவிட் டது என்று யாரும் கருதக்கூடாது. அதைத்தான் இன்றைக்குப் புரட்சித் தலைவருடைய ஆட்சியில் நாம் அந்தக் கறையை நீக்கி ஒளியாக இன்றைக்கு மாற்றி இருக்கின்றோம். இந்த ஒளி இனிமேல் என் றைக்கும் விளங்கப்போகின்ற ஒளி. இந்த ஏழு கோடி திட்டத்தைத் துவக்கி, இந்த ஆலயங்களைக் காப்பாற்ற ஒளிகூட்டிய புரட்சித் தலைவரை நான் இந்த நேரத்திலே நன்றியோடு பாராட்டி வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட உணர்வு களோடு இந்தக் கிராமப்புற ஆலயங்களின் திருப் பணிக்கு வழங்கப்படுகின்ற நிதி உதவிகளைப் பெற்றுப் போகவந்த கிராமப் பெரியவர்களை நான் அன்போடு கேட்டுக் கொள்வேன். பத்தா யிரம் ரூபாய் நாங்கள் வழங்குகிறோம்., அதோடு முடிந்துவிட்டது என்று நீங்கள் கருதத்தேவை யில்லை. சோணைமுத்துச் சேர்வை அவர்கள்கூட இங்கே சொன்னார்கள். இதைக் கட்டிமுடித்து முறையாக நாம் முடித்த பிறகு இவர்களை அழைத்து வந்து காட்டவேண்டும் என்று சொன்னார்கள். அதுமாத்திரம் போதாது. கிராமத்திலே வாழக் கூடிய மக்களையும் நீங்கள் இந்தத் திருப்பணி களிலே ஈடுபடச் செய்ய வேண்டும். அவர்களுடைய ஆன்மீக உணர்வு வளர நீங்கள் வழி வகுத்துத் தாருங்கள். அது தவிர இதிலே இன்னொரு கருத் தும் விவாதத்துக்குள்ளாகி இருக்கிறது.

ஆதிதிராவிடர் பகுதிகளுக்கு ஆலயம் ஏன்?

கிராமங்களிலே ஆதிதிராவிடர் மக்கள் அவர் கள் வாழுகின்ற பகுதியில் ஆலயம் அமைப்பதற்கு நிதிஉதவி கேட்டு வருகிறார்கள். இது என்ன? ஆதி திராவிடர்களுக்கென்று தனி ஆலயமா என்று சிலர் கேட்கிறார்கள். இது அறிவின் அடிப்படை யிலே எழுப்புகிற வாதமாக அவர்கள் கருதுகிறார் கள். ஆதி திராவிட மக்கள் வாழுகின்ற கிராமத்தில் ஆலயம் கட்டாமல் விட்டுவிட்டால், சாதி இந்தச் சமுதாயத்தில் ஒழிந்துவிடும் என்று அவர்கள் கருது கிறார்கள். நான் அவர்களை எல்லாம் கேட்டுக் கொள்வேன். நீங்கள் அந்த ஆதிதிராவிடர்மக்கள் வாழுகின்ற அந்தப் பகுதிகளுக்குச் சென்றுபாருங் கள். அவர்களுடைய உணர்வுகளைத் தெரிந்து கொள்ளுங்கள். ஆகவே ஆதி திராவிட மக்களுக்கு தனிக் கோயில், அல்லது மற்ற சாதியினருக்குத் தனிக்கோயில் என்பதினாலே அவர்கள் கேட்க வில்லை. அவர்கள் வாழுகின்ற பகுதியில் ஒரு ஆல யம் வேண்டும் என்கிறார்கள். அவர்கள் வாழு கின்ற பகுதி, எப்படி அமைந்திருக்கின்றது என்பதை எண்ணிப் பார்த்து நீங்கள் முடிவுக்கு வர வேண்டும். இன்றைக்குப் புதிய காலனிகள் உருவாக்கப்படுகின்றன. காலனிக்கு ஒரு கோயில் தேவைப்படுகிறது; ஒரு புதிய குடியிருப்புக்கு ஒரு கோயில். ஆனால் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக கிராமங்களில் அவர்கள் வாழுகின்ற பகுதியில் ஆலயம் இல்லை. பகலெல்லாம் உழைத்து விட்டு, மாலையிலே வீட்டிற்குவந்து அவன் அங்கே இருக்கின்ற குளம் குட்டையிலே குளித்துவிட்டு, படுக்கப்போவதற்கு முன்னாலே ஆண்டவனைத் தொழ வேண்டும் என்றால் ஆலயம் இல்லை. வீட்டிலிருந்து 1 கிலோமீட்டர், 2 கிலோ மீட்டர் தொலைவில் ,கிராமத்தின் நடுவிலே இருக் கிற ஆலயத்திற்கு அவனாலே வரமுடியவில்லை. அப்படி வர முடிய ததினாலே யாருக்கு நஷ்டம்? தயவு செய்து எண்ணிப் பாருங்கள்! அவன் உள் ளத்திலே ஆண்டவனைத் தொழ வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகிறது. ஆனால் அதற்கு ஆலயம் இல்லை. ஆலயம் இல்லாத காரணத்தினாலேயே ஏதேதோ ஆலயங்கள் தோன்றுகின்றன. அங்கே தோன்றுகின்ற ஆலயத்தின் பக்கம் அவன் ஈர்க்கப் படுகிறான். அதையும் நீங்கள் கவனத்திலே வைத் துக் கொள்ளுங்கள். வாதத்தை வைக்கிறவர்கள்- என்ன ஆதி திராவிடர்களுக்குத் தனி ஆலயமா என்று கேட்கிறவர்கள் - ஆதி திராவிடர்கள் மேல் அக்கறை காட்டுவதாகவும் தெரியவில்லை. அல்லது ஆதி திராவிடர்களை மற்றவர்கள் பக்கம் சமப் படுத்துவதாகவும் தெரிய வில்லை. ஆதிதிராவிடர் கள் அப்படியே இருக்கவேண்டும். அவர்கள் இந்தப் பக்கமே வரக்கூடாது என்பதற்காக அல்ல ஆதி திராவிடர்கள் ஆலயத்திற்கு நிதி கொடுப்பது. ஆதி திராவிடர்கள் ஆனாலும் சரி, வேறு எந்தச் சாதி யினராக இருந்தாலும் சரி, இன்றைக்கு ஆலயங் களுக்குள்ளே பேதம் பாராட்ட முடியாது; அப்படி பேதம் பாராட்டுகிறவர்கள் ஆலயத்திற்குள்ளே வரமுடியாது! நீங்கள் அதைத் தெரிந்து கொள் ளுங்கள்.

கேட்டால்தான்-நாமாகக் கொடுப்பதில்லை

இன்றைக்கு ஆதிதிராவிடர்களை உள்ளே விடமாட்டேன் என்று யாராவது சொன்னால், அவர்கள் ஆலயத்திற்குள்ளே வரமுடியாதது இந்தக் காலம். ஆகவே எல்லோருக்கும் பொதுவான ஆலயங்கள் எல்லா இடத்திலேயும் இருக்கின்றன. நான் ஒன்று கேட்கிறேன்., புதிய குடியிருப்புப் பகுதிகளுக்கு மட்டும் ஆலயம் தேவையென்று அங்கே ஆலயத்தைக் கட்டுகிறீர்களே! அதுமட்டும் ஏன் கட்டுகிறீர்கள்? நீங்கள் கபாலீசுவரர் ஆலயத்திற்கு போகக் கூடாதா? வடபழநி ஆலயத்திற்கு வரக் கூடாதா? அல்லது கந்தசாமி ஆலயத்தின் பக்கம் திரும்பிப் பார்க்கக் கூடாதா? எதற்காக புதிய காலனிகள் தோன்றுகின்ற பகுதியிலே ஆலயங்களை கட்டுகிறீர்கள்? அதே அடிப்படையில்தான் ஆதி திராவிடர்களும் அவர்கள் வாழுகின்ற பகுதியில் அவர்களுக்கென்று ஆலயங்களைக் கேட்கிறார்கள். ஆகவேதான் இந்தக் கிராமக் கோயில்கள் கட்டுகிற திட்டத்தில் ஆதி திராவிடர் மக்கள் எங்கேயாவது ஆலயம் கேட்டால்-கேட்டால்தான்...நாமாகக்கொடுப்பதில்லை. தேர்தலுக்குப் போகிறபோது மாத்திரம் வாக்குறுதிகளை வாரி வழங்குகிறோம்-ஆதிதிராவிடர் காலனி வாக்குகள், மற்றபகுதி வாக்குகள்-எப்படி சேர்க்க முடிகிறது உங்களாலே! அங்கே மாத்திரம் வாக்குகளைப் பெற்று ஜெயிக்க தெரிகிறது. ஆனால் அவர்கள் ஒரு கோயில் கேட்டால் ''ஆதி திராவிடர்களுக்குக் கட்டாதே -ஆதி திராவிடர்களுக்குக் கட்டினால் அது ஜாதிப்பிரச்சினையை உண்டாக்குகிறது!'' என்று வாதங்களை வைக்கிறீர்களே! இதில் எங்கே இருக்கிறது ஜாதிப் பிரச்சினை? அவர்கள் இருக்கிறபகுதியில் ஒரு ஆலயம் கேட்கிறார்கள். அவர்களுக்குக் கட்டிக்கொள்ள வசதி இல்லை. அவர்களால் முடியாத காரணத்தினால் தானே மரத்தின் அடியில் ஒரு வேலை வைத்து வணங்குகிறார்கள். மரத்தினடியில் ஒரு கல்லை வைத்து வணங்குகிறார்கள். முறையாக ஒரு ஆலயத்தைக் கட்டித் தருகிற ஒரு சூழ்நிலை நீண்ட காலத்திற்கு முன்னமே ஏற்பட்டிருக்குமானால் இந்த சமயத்தை மற்றவர்கள் பழிக்கிறஅளவுக்கு அல்லது விமர்ச்சிக்கிற அளவிற்கு எப்படி இந்தத் தெய்வ வழிபாட்டுமுறைகள் வந்திருக்க முடியும் என்று கருதுகிறீர்கள்! ஆகவே தான் ஆகமவிதிப்படி இல்லையென்றாலும் அவர்களுடைய உள்ளத்தைத் திருப்திபடுத்துகின்ற வகையில் சிறிய ஆலயங்களை கட்ட இந்தத் திட்டத்திலே இடம் இருக்கிறது. காரணம் இன்றைக்குக் கூட எனக்கொருவர் கடிதம் எழுதியிருக்கிறார். நீங்கள் இந்த ஆதி திராவிடர்களுக்கென்று ஆலயம் கட்டுவதை அனுமதிக்காதீர்கள் என்று., நாங்கள் ஆதிதிராவிடர்களுக்கென்று ஆலயம் கட்டவில்லை. தயவு செய்து நீங்கள் அதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழக அரசும் அதை அனுமதிக்காது

ஆதிதிராவிடர் வாழுகின்ற பகுதியில் ஆலயம் கட்டுகின்றோமே தவிர,ஆதிதிராவிடர்களுக்கென்று ஆலயம் கிடையாது. அந்தப் பகுதியிலே இருக்கிற ஆலயங்களை எல்லோரும் வணங்கலாம். உடனடியாகப் படுக்கப் போவதற்கு முன்னால் அல்லது காலையில் எழுந்தவுடனே ஒரு இறைவனை வணங்கவேண்டுமென்று விரும்புகின்ற மக்கள், அவர்கள் வாழுகின்ற பகுதியிலே ஆலயத்தைக் கேட்கிறார்கள். ஆகவே கிராமக் கோயில்கள் கட்டுவதற்கு வழங்கப்படுகின்ற நிதி உதவியைப் பெற வந்திருக்கின்ற பெருமக்களை நான் அன்போடு கேட்டுக்கொள்வேன். வழக்கமாக ஒரு குறை இருக்கிறது. கிராமத்திற்கெனவே ஒரு டெலிவிஷன் கொடுத்தால் ,அது ஆதிதிராவிடர்மக்கள் வாழுகின்ற பகுதிக்கு வராது. மற்றவர்கள் பகுதிக்குத் தான் போகும். அதே போல் ஒரு ரேடியோ கொடுத்தால் அது மற்றவர்கள் வாழுகின்ற பகுதிக்குத் தான் போகும். இது நடைமுறையிலே இருக்கின்ற ஒரு நிகழ்வு. இதை மாற்றிவிடவும் முடியாது. என்றைக்கோ இது மாறப் போகிறது? அன்றைக்கு வேண்டுமானால் எல்லோருக்கும் ஒரே கோயில் அந்த இடத்தில் வந்தால் போதும் என்று நாம் முடிவு செய்து கொள்ளலாம். ஆனால் இன்றைக்கு ஆதி திராவிட மக்கள், தங்களை எல்லாத் துறைகளியிலும்இழிவுபடுத்துவதாகப்புறக்கணிக்கப்படுவதாக அவர்கள் கருதுகின்றனர். அந்தக் கருத்திற்கு அருள் கூர்ந்து இங்கே வந்திருக்கின்ற கிராமத்துப் பெரியவர்கள் இடம் தந்துவிடக் கூடாது. நான் இன்னொன்றை வேண்டுமானாலும் சொல்லுகின்றேன். ஒரு கிராமத்தில் இரண்டு ஆலயங்கள் இருக்கின்றன என்று நீங்கள் வைத்துக் கொண்டால், ஒன்று அந்தப் பகுதியிலே இருக்கிறது. இன்னொன்று ஆதி திராவிடர் வாழும் பகுதியிலே இருக்கிறது., அந்த இரண்டிற்கும் வேண்டுமானாலும் நீங்கள் பணம் வேண்டும் என்று கேட்டு வாங்குங்கள். பஞ்சாயத்துத் தேர்தல்கள் எல்லாம்கூட நடந்து முடிந்திருக்கின்றன. பஞ்சாயத்துத் தலைவர்கள், அவர்களே முயற்சி எடுத்துக் கோயில்களைக் கட்டித்தரவேண்டும். திருப்பணியை நிறைவேற்றித் தரவேண்டும். ஆதி திராவிடருக்குக் கோயில் அல்லது மற்ற ஜாதியினருக்குக்கோயில் என்று இல்லை. இன்றைக்கு ஒரு ரெவின்யூ கிராமம் என்றால் அதில் 4 துணைக்கிராமங்கள் இருக்கின்றன. அந்தத் துணை கிராமங்களுக்கென்று ஆலயங்களைக் கேட்கிறார்கள். ஆகவே அவர்கள் வாழுகிற பகுதிக்குக் கேட்கிறார்களே தவிர, எங்கள் ஜாதிக்கொரு கோயில் வேண்டும் என யாரும் கேட்பதில்லை. அதற்குச் சட்டமும் இல்லை. தமிழக அரசும் அதை அனுமதிக்கப்போவது இல்லை. நாம் இந்த ஆலயங்களை எழுப்புவதற்குக் காரணம் ஆலய வழிபாட்டிலே மக்களுக்கு அக்கறையை உண்டாக்க வேண்டும். அதிலே அவர்கள் பக்தி உணர்வோடு கலந்துகொள்கின்ற சூழ்நிலையை நாம் உருவாக்கவேண்டும்., அப்படி உருவாக்கினால் தான் நம்முடைய ஆன்மீகம் செழிக்கும், தழைக்கும்., அறநெறி வளர்ந்து இந்த நாட்டில் மனித உணர்வுகளுக்கு ஆன்மீகம் துணையாக இருக்கும் என்கிற

அரிதாவது எது?

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையும்
கட்டலாம்; ஒரு சிங்கமுதுகின்மேல் கொள்ள
லாம்!
கட்செவி எடுத்தாட்டலாம்;

வெந்தழலில் இரதம்வைத் தைந்துலோ
கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்
விண்ணவரை ஏவல்கொள்ளலாம்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம்
மற்றொரு
சரீரத்தி லும்புகுதலாம்
சலமேல் நடக்கலாம், கனல்மேல் இருக்கலாம்
தன்நிகரில் முத்தி பெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறம் அரிது.

—தாயுமானவர்

முன்னோர்களின் தத்துவம் வெற்றிபெறும் என்கிற வகையிலே இந்தத்திட்டம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதை வெற்றிகரமாக நிறைவேற்றித் தருவதற்கு நீங்கள் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிறந்த பணியாளர்களுக்குப் பரிசு

நம்முடைய அருமை நண்பர் பொன்னுசாமி அவர்கள் இந்த வடபழநி ஆண்டவர் ஆலயத்தின் பேரில் ஒரு 50000 ரூபாய் வைப்புநிதியாக வைத்து அதிலே இருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை 5500 ரூபாயை ஆண்டுதோறும் இந்த ஆலயப்பணியாளர்களில் சிறந்த பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து, இங்கே பக்தர்கள் வருகிறார்களே, அவர்களிடத்திலே யார் மிகுந்த அன்போடும், பணிவோடும், கண்ணியத்தோடும் நடந்து கொண்டு பணிபுரிகிறார்களோ அவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பரிசு வழங்கவேண்டுமென விரும்பி அளித்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய தக்கார் சீனிவாசராவ் அவர்கள் ''இந்த ஆலயத்தைப் பொறுத்தவரை எனக்குச் சங்கடம் வந்து விடக்கூடாது ;யாரும் என்னைக் கோபித்துக் கொள்ளக்கூடாது, இந்த ஆலயத்திலே பணிபுரிகின்ற 80 பேருக்குமே தலா நூறு ரூபாய் பரிசாகக் கொடுத்துவிடலாம்., வட்டித்தொகையாக வந்திருக்கின்ற 5500 ரூபாயுடன், நானும் ஒரு 2500 ரூபாயைப் போட்டு எட்டாயிரம் ரூபாயாக இந்த ஆண்டு தந்துவிடலாம்.''என்று கூறியிருக்கிறார்கள். நான் இந்த ஆண்டு தருவதை மறுக்கவில்லை. ஆனால் பொன்னுசாமி அவர்களுடைய திட்டம் அப்படியே நிறைவேற்றப்படவேண்டும். சிறந்தபணியாளர்கள் யார் என்று தேர்ந்தெடுத்து அவர்களுக்குத்தான் வழங்கவேண்டும். எப்படி தேர்ந்தெடுப்பது என்றால் வருகின்ற பக்தர்களைக்கேளுங்கள். அவர்கள் நல்ல பணியாளர்களைத் தெரிவிக்கட்டும்.,''இவர்கள் நாங்கள் வருகிற பொழுது இவ்வளவு முக மலர்ச்சியோடு வரவேற்கிறார்கள். எங்களுக்கு உதவி செய்கிறார்கள். எங்களுக்குப் பதிலைச் சரியாகச் சொல்கிறார்கள். எங்களுக்கு உறுதுணையாகத் திகழ்கிறார்கள். ''என்று நல்ல பணியாளர்கள் என்று யாரைச் சொல்லுகிறார்களோ அவர்களைத் தேர்ந்தெடுங்கள். இதைப் போலவே நம்முடைய நண்பர் பொன்னுசாமி அவர்கள், தாம் தக்காராக விளங்குகின்ற பழநி ஆலயத்திற்கும் ஒரு லட்ச ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வழங்கியிருக்கின்ற அந்த ஒரு லட்ச ரூபாய் போதாது ; காரணம் பழநி ஆலயத்திலே பணியாளர்கள் அதிகம். அதனால் அவர்களுடைய நண்பர்களும் சேர்ந்து 2 லட்ச ரூபாயைத் தந்திருக்கிறார்கள். அந்த 3 லட்ச ரூபாய்களும் வைப்பு நிதியிலே போடப்பட்டு அதிலே இருந்து வட்டியாக வருகின்ற ஏறத்தாழ முப்பத்தைந்து அல்லது நாற்பத்தைந்தாயிரம் ரூபாயை பழநி ஆலயத்திலும் சிறந்த பணியாளர்களுக்குத் தேர்வு செய்து ஆண்டுதோறும் வழங்குகின்ற திட்டத்தை அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக அவர்களைநான் பாராட்டுகின்றேன்.

தயவுசெய்து காயப்படுத்தவேண்டாம்

இன்றைக்குத் தமிழகத்திலே ஆலயத் தக்கார்களாக எப்படிப்பலரைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதற்காக நான் இதைச் சொல்கிறேன். எப்படிப்பட்ட சிறந்த தக்கார்கள் இருவரை நீங்கள் பார்க்கிறீர்கள். பல பத்திரிகைகளிலே சில நேரங்களிலே ஆலயங்களைப் பற்றி விமர்சிக்கிறார்கள். நான் அவர்கள் விமர்சிப்பதைப் பற்றிப் பாராட்டுகின்றேன். ஆனால் அதிலே என்ன குறை ஏற்படுகிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்தாக வேண்டும். கிடைக்கிற தகவல் சரியான தகவலா என்பதைத் தெரிந்து கொண்டு எழுதுங்கள். ஏதோ வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று தயவு செய்து எழுதாதீர்கள்! அழிந்து கொண்டிருந்த ஒரு துறையை இன்றைக்குப் புதுப்பித்திருக்கிறோம். வளர்த்துக்

கொண்டிருக்கிறோம். தயவுசெய்து நீங்கள் அதற்கு நன்றி தெரிவிக்க வேண்டாம். தயவு செய்து காயப்படுத்தாமலாவது இருங்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு யாராவது சிலர் குறை சொன்னால் அதைப் பற்றி நாங்கள் கவலைப்படப் போவதில்லை. நடுநிலையாளர்கள், மக்களிடத்திலே நல்ல உணர்வுகளை வளர்க்க வேண்டியவர்கள் இந்தத் தவறுகளைத் தெரிந்தோ தெரியாமலோ செய்து விட வேண்டாம் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். குறைகள் இருந்தால் எடுத்துச் சொல்லுங்கள். குற்றம் செய்பவர்களை ஒரு கணம் கூட வைத்துக்கொள்ளமாட்டோம். அடுத்த வினாடியே அகற்றி விடுவோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். எங்கேயோ கிடைக்கிற அரைகுறை தகவல்களை வைத்துக் கொண்டு, மக்களிடத்திலே அரசியல் தலைவர்களைப் போல, ஆன்மீகத்துறையை நடத்துகிறவர்களும் நடந்து கொள்ளவேண்டாம் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இது ஒரு மிகப் பெரிய கடல் போன்ற துறை. துறை சிறியதாக இருக்கலாம்., இது தொடர்பு கொண்டிருக்கின்ற பகுதி இருக்கின்றதே மிகப் பெரியது, ஆகவே இதை நிர்வகிப்பது என்பது மிகப் பெரிய கடிமான பணி. ஆனால் இந்தப் பணியை எப்படியோ முயன்று, முடிந்த அளவு நிர்வகித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு உறுதுணையாக நீங்கள் அனைவரும் இருக்கவேண்டும் என்று கேட்டு, இங்கே இந்தத் திருப்பணி நிதியை வாங்க வந்திருக்கின்ற கிராமப் பெரியவர்கள் அனைவரையும் மீண்டும் ஒருமுறை வரவேற்று, இந்த நிதி வழங்குகின்ற விழாவை இந்த ஆலய நிகழ்ச்சியோடு சேர்த்து நடத்த அனுமதி அளித்த பழநி ஆலயத்தினுடைய தக்கார் பொன்னுசாமி அவர்களுக்கும், நிர்வாக அதிகாரி அவர்களுக்கும் நம்முடைய ஆணையர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

வணக்கம்.

— — — — — —

பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!

துதிவாணி வீரம் விசயம் சந் தானம்துணிவுதனம்
அதிதா னியம்சவு பாக்கியம் போகம் அறிவழகு
புதிதாம் பெருமை அறம்குலம் நோயின்மை பூண் வயது
பதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே.

1.மதிப்புதரும் கல்வி, 2. வலிமை 3. வெற்றி 4. துணிவு 5. மக்கள்பேறு 6. பொன்பொருள் 7. உணவுப்பொருட்கள் 8. நல்வாழ்வு 9. இன்ப நுகர்ச்சி 10. அறிவு 11. அழகு 12. நீடித்த புகழ் 13. தருமசிந்தை 14.நற்குடிப்பிறப்பு 15. நோயற்ற வாழ்வு 16. நீண்ட ஆயுள் ஆகிய பதினாறு பேறுகளையே பெற்று வாழுமாறு நம்மைப் பெரியோர்கள் ஆசிர்வதிக்கின்றனர்.

உ

பாவம் செய்தது யார்?

இராம கிருஷ்ண பரமஹம்சர்

ஒரு சன்னியாசி ஒரு கோயிலுக்குப் பக்கத்தில் வாழ்ந்து வந்தார். அவருடைய இருப்பிடத்திற்கு எதிரில் ஒருதாசி வீடு இருந்தது. அந்த வேசியின் வீட்டில் சதாசர்வகாலமும் ஆண்கள் கூடியிருப்பார்கள்; வருவதும் போவதுமாக இருப்பார்கள்.

இதைக் கண்ட அந்தச் சன்னியாசி ஒரு நாள் தாசியைக் கூப்பிட்டு, ''நீ பெரும் பாவியாகி விட்டாய். இரவும் பகலும் நீ பாவம் செய்து கொண்டே இருக்கிறாய். உனக்கு என்ன கதி வரப் போகிறதோ?'' என்று சொல்லிக் கடுமையாக கண்டித்தார்.



இராம கிருஷ்ண பரமஹம்சர்

தாசி, தான் செய்த பாவத் தொழில்களுக்கு உளமாரப் பெரிதும் மனம் வருந்தினாள். மிகவும் வருத்தத்துடன் அவள் தன்னை மன்னித்து அருள வேண்டும் என்று இறைவனை நோக்கி உண்மையாகவும் உள்ளன்போடும் பிரார்த்தித்துக் கொண்டாள். ஆனால் அவளது குலத் தொழிலே வேசித் தொழிலாக இருந்ததனால் வேறு வகையால் அவளால் வாழ்க்கைக் காலட்சேபத்தை நடத்தவும் முடியவில்லை. ஆனாலும் வயிற்றுப் பிழைப்புக்காக உடலை விற்க நேர்ந்தபோதெல்லாம் அவள் உள்ளம் குழைந்து மன்னிப்பு வேண்டி பகவானைப் பிரார்த்திப்பது வழக்கம். தவறு செய்வதை தவிர்க்க இயலாத நிலையில், அந்த அபலைப் பெண் மனம் கசிந்து உருகினாள். மன்னித்து அருள் புரியும்படி பகவானை நினைத்து மேலும் மேலும் உருக்கத்துடன் பிரார்த்தித்துக் கொண்டே இருந்தாள்.

சன்னியாசிக்கு தாசியின் உள்ளத்தில் ஏற்பட்ட போராட்டமோ மனமாற்றமோ தெரியாது. அவளது மனநிலை அடியோடு முற்றிலும் மாறி அமைந்துவிட்டதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. வெளிப்படையாகத் தாசியின் வாழ்க்கையில் மாற்றம் ஒன்றும் ஏற்படாததால், தாம் அவ்வளவு சொல்லியும் தாசி கேட்காமல் தன் பழைய வாழ்க்கையையே தொடர்ந்து கொண்டிடிருக்கிறாள் என்று அவர் நினைத்தார். அந்த எண்ணத்துடன் சன்னியாசி, 'இவளுடைய ஆயுட்காலத்துக்குள் எத்தனை பேர் இவளிடம் வருகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்' என்று முடிவு செய்தார். ஆகவே, அன்று முதல் அவளைக் கவனிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். யாராவது ஒருவர் அந்தத் தாசியின் வீட்டுக்குள் நுழைந்தால், உடனே சன்னியாசி ஒரு கூழாங்கல்லை எடுத்துப்போட்டு எண்ணிக் கொள்வார். இப்படி அவர் போட்டு வந்த கற்கள் காலக்கிரமத்தில் பெரிய குவியலாக அங்கே குவிந்தன.

ஒரு நாள் அந்த சன்னியாசி, இந்தக் கற்குவியலைத் தாசிக்குச் சுட்டிக்காட்டி, ''பெண்ணே, இந்தக் குவியலைப் பார்த்தாயா? நான் எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டாம் என்று சொன்னேனோ, அதே காரியத்தை நீ எத்தனை தரம் செய்திருக்கிறாய் என்பதை இந்தக் குவியலில் ஒவ்வொரு கல்லும் உனக்குத் தெரிவிக்கும். இப்போதும் சொல்கிறேன். வீணாகக் கெட்டுப் போகாதே. ஜாக்கிரதையாக இரு'' என்று சொன்னார்.

தாசி தன் பாவச் செயல்களைக் குறிக்கும் அவ்வளவு பெரிய கற்குவியலைக் கண்ட மாத்திரத்திலேயே நடுநடுங்கினாள். துன்பம் அவளது உள்ளத்தைக் கசக்கி பிழிந்தது. கடைந்தெடுத்தது. ஆகவே, கண்ணீரும் கம்பலையுமாக அவள் உளமார வருந்தி ''பகவானே, இப்படிப்பட்ட தீய செயலை இனியும் நான் செய்யாதபடி என் உயிரை கொண்டு போகக் கூடாதா? இப்படிப்பட்ட இழிந்த வாழ்க்கையிலிருந்து என்னை விடுவித்துவிடு'' என்று தன் ஆதரவற்ற நிலையைச் சொல்லிக் கடவுளிடம்

பிரார்த்தித்தாள். ஆண்டவன் அவளுடைய உண்மையான பிரார்த்தனைக்குச் செவி சாய்க்கவே செய்தார். அவளுடைய பிரார்த்தனையின் படியே அவள் உயிரை அன்றிரவே எமன் கொண்டு போனான். இறைவனின் லீலையைத்தான் என்னவென்று சொல்வது? அதே நாளில் அந்தச் சன்னியாசியும் இறந்து போனார்.

வைகுண்டத்திலிருந்து விஷ்ணு தூதர்கள் வந்து அந்த தாசியின் உயிரைச் சொர்க்கத்திற்கு அழைத்துப் போக ஆரம்பித்தார்கள். அதே சமயத்தில் எமபடர்கள் வந்து அந்தச் சன்னியாசியின் உயிரை நரகத்திற்கு கொண்டு போவதற்காகக் கட்டிப் பிணைத்தார்கள். தாசிப் பெண்ணுக்குக் கிடைத்த உயர்ந்த நற்கதியைப் 'பார்த்த சன்னியாசி, ''இது தானா ஆண்டவனுடைய நீதி? ஆயுள் முழுவதையும் எளிய வாழ்க்கையிலும் தவத்திலும் கழித்த என்னை நரகத்திற்கும், தினந்தோறும் பாவம் செய்த தாசியை மோட்சத்திற்கும் அழைத்துப் போவது நியாயமாகுமா?'' என்று கூறி அலறினார்.

இதைக் கேட்ட விஷ்ணு தூதர்கள் சொன்னார்கள்: ''இறைவனின் நீதி எப்போதுமே நியாயமானதாகத்தான் இருக்கும். நீ எதை நினைக்கிறாயோ அதையே பலனாக அனுபவிப்பாய். கௌரவத்தையும் புகழையும் பெறுவதற்காக நீ வீண் படாடோபத்துடன் காலம் கழித்தாய். பகவான் உனக்கு அவற்றைக் கொடுத்தார். உன் மனம் ஒரு போதும் அந்தரங்க சுத்தத்துடன் இறைவனை நாடியதே இல்லை. இந்தத் தாசியோ உடலால் பாவம் செய்தாலுங்கூட, உள்ளம் உருகி இரவும் பகலுமாக எப்போதும்இறைவனையே நினைத்துப் பிரார்த்தித்து வந்தாள். பூலோகத்தில் உன் உடலும் அவளது உடலும் அடைகிற மரியாதையை இப்போது பார். உடலால் நீ பாவம் செய்யவில்லை. ஆகவே உன் உடலை மலர்களால் அலங்கரித்து ஆற்றில் இடுவதற்காக மேளதாளங்களுடன் ஊர்வலம் கொண்டு போகிறார்கள். தாசி, உடலால் பாவம் செய்தாள். அவளது உடலை இந்த நேரத்தில் நாயும் நரியும் பிடுங்கித் தின்கின்றன. ஆனால் அவளது மனம் தூய்மையாக இருந்த காரணத்தால் அவள் சொர்க்கம் போய்க் கொண்டிருக்கிறாள். உன் மனம் எப்போதும் அவளுடைய பாவச் செயல்களைப் பற்றியே சிந்தித்ததினால் அசுத்தம் அடைந்தது. ஆகையால் நீ பாவம் செய்த ஆத்மாக்கள் உள்ள நரகத்திற்குப் போகிறாய். உண்மையில் நீயே பாவமும் வேசித்தனமும் செய்தவனே தவிர அவள் அல்ல''.

மயிலையின் பெருமை



சிவபெருமான் ஒருசமயம் திருநீற்றின் பெருமையை உமையம்மைக்கு எடுத்துரைத்துக்கொண்டிருந்தார். ஈசனார் உபதேசத்தைக் கேட்டுக் கொண்டிருந்த உமையம்மையார் அருகிலே ஆடிக் கொண்டிருந்த மயில் ஒன்றின் அழகிலே தம்மைப் பறிகொடுத்து, சிவனாரின் உபதேசத்தை அலட்சியப் படுத்திவிட்டார். அதனால் வெகுண்ட கண்ணுதல் பெருமான் ''எம்முரை கேளாது மயிலின்மீது மையலுற்றுங் கவனமிழந்த காரணத்தால் நீ மயிலாகவே மண்ணுலகில் தோன்றி, எம்மருள் பெற்று பின் எம்மை அடைவாயாக'' என்று ஆணையிட்டருளினார். உமையம்மையார் மயிலாகத் தோன்றித் தவம் செய்து இறைவனை அடைந்த திருத்தலமே மயிலாப்பூர் ஆகும்.

இம்மயிலையம் பதியில் புகழ்பெற்ற ஏழு சிவாலயங்களும் திகழ்வதால் 'மயிலையே கயிலை'' என ஆன்றோர்கள் புகழ்ந்துரைப்பர். மயிலையின் ஏழு சிவாலயங்களைக் காட்டுகிறது இப்படம்.

மதுரைத் திருக்கோயில்

வி. என். சிதம்பரம்,

தக்கார், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம்,

மதுரை

நாடும் நகரமும்:

தமிழகத்தின் முப்பெரும் பிரிவுகளாக விளங்கிய சேர, சோழ, பாண்டிய நாடுகளுள் 'பாண்டிய நாடு' பழம் பெருமையுடையது. ஆதிகாவியமான இராமாயணத்திலும், வியாசரின் பாரதத்திலும் இந்நாட்டின் பெருமை பேசப் பெற்றுள்ளது. கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த கிரீஸ் நாட்டுத் தூதுவன் 'மெகஸ்தனிஸ்' பாண்டி நாட்டைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளான். தமிழ் இலக்கியங்களில் இதன் தொன்மையைப் பல இடங்களில் காணலாம். பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்பே, பாண்டியர்கள் தமிழுக்காகச் சங்கம் வைத்துப் பணி செய்த பெருமை இந்நாட்டிற்குஉண்டு. இத்தகு பழம் பெரு நாட்டின் பாடல் சான்ற தலை நகரமாக, ஏற்றம் பெற்றது எழில் மதுரை. இப்பெரும் நகர் ஏறத்தாழ 3,500 ஆண்டுகள் பழமையுடையது எனலாம். இந்நகர் 'மதுரைப் பெரு நன் மாநகர்' என மணிவாசகரால் பாராட்டப் பெற்றது. சங்கப் பாடல்களும் இடைக்காலப் பக்திப்பனுவல்களும் இதன் பெருமையைப் பலபடியாக விளக்குகின்றன. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த புகழுடன் மட்டுமின்றி இறைவனே தலைமை ஏற்று நடத்திய தனிச்சிறப்பும் இந்நகருக்கு உண்டு. இந்நகரின் மண்ணும், நீரும், நெருப்பும் கூட, தமிழின் சுவையை அறிந்து உலகிற்குக் காட்டின. மதுரை, நான்மாடக்கூடல், திருவாலவாய் என்னும் பல பெயர்களால் அழைக்கப் பெறும் சிறப்புடையது இந்நகர்.

கோபுரம் சூழ் மணிக்கோயில்

தமிழகத்தின் திருக்கோயில்கள் பலவற்றிலும் தனித்தலைமை பெற்று விளங்குவதுஅருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் ஆகும். பாண்டி நாட்டில் பாடல் பெற்ற தலங்கள் பதினான்கில் முதலிடம் பெறுவது. கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னரே பெருமை பெற்றிருந்தது. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் அழகிய கோபுரத்துடன் காட்சி தந்ததாக இத்திருக்கோயில் பாடப்பெற்றுள்ளது; கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு தொடங்கி 18 ஆம் நூற்றாண்டுவரை, பலரால் திருப்பணி செய்யப் பெற்றாலும், ஒருவரே திட்டமிட்டுக் கட்டியது போன்ற அற்புத அழகும், பெருமிதத் தோற்றமும் கொண்டு சமயக் கலைக்கருவூலமாகக் கவின்பெறவிளங்குகின்றது. பாண்டிய மன்னர்கள், நாயக்கர்கள் ஆகியோருடைய அற்புதத் திருப்பணிகளால் சிறப்புப் பெற்றுள்ளது. 15 ஏக்கர் பரப்பில் 847 அடி நீளமும் 792 அடி அகலமும் கொண்டு 14 கோபுரங்களுடன் விளங்குகின்றது. மீனாட்சி சொக்கநாதர் திருக்கோயில் நான்கு ஆடி வீதிகளைக் கொண்டு காட்சி தருகின்றது.

ஒன்பது நிலைகளை உடைய நான்குகோபுரங்கள் நான்கு திசைகளிலும் உள்ளன. கிழக்கே உள்ளது மிகவும் பழமையான இராசகோபுரம். மாறவர்மன் சுந்தரபாண்டியனால் (1216-38) கட்டப்பெற்றது. 153 அடி உயரம். தெற்குக் கோபுரம், அமைந்துள்ள கோபுரங்களில் மிகவும் உயரமானது. 160 அடி உயரம். இதில் 1511 சுதைச் சிற்பங்கள் உள்ளன. மேலக் கோபுரம் 154 அடி உயரமுடையது. இரண்டாவதாகக் கட்டப்பெற்றது. பராக்கிரம பாண்டியன் திருப்பணி (1315-47) ஆகும். வடக்குக் கோபுரம் 152 அடி உயரமுடையது. இறுதியாகத் திருப்பணி செய்யப் பெற்றது. கோயிலின் கம்பீரத் தோற்றத்திற்குக் காரணமாக உள்ளவை இக்கோபுரங்களே! இவை தவிர சித்திரக் கோபுரம் மீனாட்சி சந்நிதியில் அமைந்த அழகான கோபுரமாகும். ஏழு நிலைகளும் 117 அடி உயரமும் கொண்டது. அற்புதமான சுதைச்சிற்பங்கள் நிறைந்தது.

முக்குறுணி விநாயகர்

மனங்கவர் மண்டபங்களும் சிற்பங்களும்

கீழச் சித்திரை வீதியில் அம்மன் சந்நிதிக்கு முன்பாக நகரா மண்டபம் உள்ளது. கிழக்குக் கோபுரத்திற்கு எதிரில் அமைந்துள்ள மண்டபம் புதுமண்டபம் என அழைக்கப் பெறுகிறது. இதனைத் திருமலை நாயக்கர் கட்டினார். அற்புதச் சிற்பங்கள் பல இதில் உள்ளன. அம்மன் சந்நிதியின் முகப்பில் அமைந்தது அஷ்ட சக்தி மண்டபமாகும். இதன் எட்டுத் தூண்களிலும் எட்டு சக்திகளின் திருவுருவங்கள் உள்ளன. இடதுபுறம் கௌமாரி, ரௌத்ரி, வைணவி, மகாலட்சுமியும், வலதுபுறம் யஞ்ஞரூபிணி, சாமளை, மகேசுவரி, மனோன்மணியும் ஆகிய அம்மைகள் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகின்றனர். விதானத்தில் சுனத வேலைப்பாடுகளாகத் திருவிளையாடற் காட்சிகள் உள்ளன. இதனைக் கடந்தால் மீனாட்சி நாயக்கர் மண்டபம் 22 அடி உயரமுடையதாக உள்ளது. இம்மண்டபத்திற்குக் கிழக்கே சித்திரக்கோபுரத்தைத் தாண்டிச் சென்றால், முதலிப்பிள்ளை மண்டபம் உள்ளது. இங்கு தாருகாவனத்து முனிவர், அவர் மனைவியர், கங்காள நாதர், மோகினி முதலிய அழகிய சிற்பங்கள் உள்ளன. இதனைத் தாண்டின் நான்கு புறமும் சுற்று மண்டபங்களை உடைய பொற்றாமரைக்குளம் காட்சி அளிக்கிறது. இதன் தெற்கு மண்டபத்தில் திருக்குறள், தலத் தேவாரப்பாடல்கள், சிவஞானபோதம், அபிராமி அந்தாதி முதலிய தமிழ் நூல்கள் சலவைக் கல்லில் பொறிக்கப் பெற்றுள்ளன. அன்று சங்கப் பலகை தந்ததாக இக்குளத்தின்பெருமை பேசப் பெறுகிறது. இன்றும் இதன்கரைதமிழ் வளர்ச்சிக்குரிய பணியைச் செய்கின்றது. பழைய ஓவியங்கள் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் பேசுகின்றதையும் இக்குளத்தின் வடக்கு, கிழக்கு மண்டபச் சுவர்களில் காணலாம். அம்மை கோயிலில் ஊஞ்சல் மண்டபமும் கிளிக்கூட்டு மண்டபமும்உள்ளன. அழகிய சிற்பங்களும் ஓவியங்களும் இம்மண்ட

மூர்க்க நாயனார்

நல்ல நோக்கம் கருதித் தீய வழிமுறைகளைக் கையாண்டாலும் தவறில்லை என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். சிவனடியார்களை உண்பிக்கும் நல்ல நோக்கத்திற்காகச் சூதாடும் தீய வழி முறையைப் பின்பற்றியிருக்கிற ஒருவரும், 63 நாயன்மார்களுள் ஒரு நாயன்மாராக வைத்துப் போற்றப்படுகிறார். அவரே மூர்க்க நாயனார்.

சென்னைக்கருகில் உள்ள திருவேற்காட்டில் வேளாண் குடியிற் பிறந்தவராகிய இவர், சிவனடியார்க்குத் தூய அடிசில் நெய் கன்னல் சுவையின் கறிகள் அமைத்து விருப்பால் அமுது செய்விக்கும் திருப்பணியை மேற்கொண்டிருந்தார். கைப்பொருள் யாவும் கழிந்து போக, தமக்குரிமையான காணிகளையும் விற்று, அடியார்களுக்கு அமுதுசெய்வித்துள்ளார். இறுதியாக, தம்முடைய அறப்பணிக்கு எந்தப் பொருளும் இல்லாமல் போகவே, சூதாட்டத்தைத் தொழிலாகக்கொண்டு அதில் கிடைத்த பொருளைக் கொண்டு அடியார்களைப் புரந்துள்ளார்.

திருவேற்காட்டில் தம்முடன் சூதாட ஒருவரும் முன்வராத காரணத்தால், குடந்தைக்குச் சென்று சூதாடுதலையும், அதில் கிடைத்த பொருளால் அடியார்களை உண்பித்தலையும் தம் தொண்டாக ஆற்றியுள்ளார். ஒருமுறை இவருடன் தோற்றுப்போன சிலர் பொருளைக் கொடுக்காமல் ஏமாற்றவே, சிவனடியார்க்கு அமுது செய்யும் திருப்பணிக்கு முட்டு நேர்ந்துவிடுமே என்ற அச்சத்தால் பொருள்தர மறுத்தோரைக் கத்தியாலும் குத்தியிருக்கிறார் இவர். இம்மூர்க்கதனத்தாலேயே இவருக்கு மூர்க்க நாயனார் என்ற பெயர் வாய்த்தது. ஆனால் இவர் நன்னோக்கம் கருதிச் சூதாடியமையால் 'நற்சூதர்' எனவே போற்றப்பட்டார்.

''முற்சூதும் தாம்தோற்று
முதற்பணயம் அவர்கொள்ளப்
பிற்சூது பலமுறையும்
வென்று பெரும் பொருளாக்குச்
சொற்சூதான் மறுத்தாரைச்
சுரிகையுரு விக்குத்தி
நற்சூதர் மூர்க்கரெனும்
பெயர்பெற்றார் நானிலத்தில்''

என்று இவரைப் பாராட்டுகிறது பெரியபுராணம்.

பங்களில் உள்ளன. பாண்டவர் ஐவர், துரௌபதை, வாலி, சுக்ரீவன், புருஷா மிருகம் முதலிய பெரும் சிற்பங்களும் கண்களுக்கு விருந்து தருகின்றன. இதனைத் தாண்டி உள்ளே செல்லின் அம்மை மீனாட்சி அழகுக்காட்சி தருகின்றாள். இரண்டு பிரகாரங்களோடு அன்னை ஆலயம் மிளிர்கின்றது. சுவாமி கோயில் இரண்டாம் பிரகாரத்தின் கீழ்ப்பகுதியில் கம்பத்தடிமண்டபம், கவின்தரும் சிற்பக்களஞ்சியமாக உள்ளது. உயரமான எட்டுத் தூண்களில் இறைவனின் அருட் கோலங்கள் இங்கு காட்சி தருகின்றன. மீனாட்சி திருமணக் கோலச்சிற்பம் எவரையும் ஈர்த்துத் தன்வயப்படுத்தும் தன்மையது. மற்றும் திரிபுர தகனர், சோம சுந்தரர், காலசம்ஹாரர், சுகாசனர், நடராசர், காமதகனர், சந்திரசேகரர், ரிஷபாந்திகர், லிங்கோத்பவர், கயிலைக்காட்சி, சக்ரதரர், ஏகபாதர், ரிஷபாரூடர், அர்த்த நாரீசர், சங்கரநாராயணர், சலந்திர அனுக்கிரகர், தட்சிணாமூர்த்தி, கஜசம்ஹாரர், சண்டேச அனுக்கிரகர், பிட்சாடனர், உருத்திரர், கிராதார்ச்சுனர், சோமாஸ்கந்தர் முதலிய திருவுருவங்கள் உள்ளன.

இம்மண்டபத்திற்குக் கிழக்கே அக்னி வீர பத்திரர், அகோர வீரபத்திரர், ஊர்த்துவ தாண்டவர், பத்திரகாளி உருவங்கள் கவின் பெறு சிற்பங்களாகக் காட்சி அளிக்கின்றன.

சுவாமி சந்நிதி வாசலில் 12 அடி உயரமுள்ள துவார பாலகர்களின் சிற்பங்கள் உள்ளன. சுவாமி கோயிலின் முதற் பிரகாரத்தில் ஆறு கால் மண்டபமும், வடக்குச் சுற்றில் கனக சபை, இரத்தினசபை ஆகியனவும், மகா மண்டபத்தில் வெள்ளியம்பலமும் அதில் கால் மாறி ஆடும் நடராசர் காட்சியும் உள்ளன. எட்டு யானைகளால் தாங்கப் பெறும் இந்திர விமானத்தில் சொக்கநாதர் எழுந்தருளி உள்ளார்.

இவ்விமானம் தங்கத்தால் வேயப்பெற்றது. அம்மன் கோயில் விமானமும் தங்கத்தால் அணிசெய்யப்பெற்றது.

சுவாமி சந்நிதிக்கு முன்னர் கம்பத்தடி மண்டபத்திற்குக் கிழக்கே வீர வசந்தராயர் மண்டபமும் அதனை ஒட்டி வடதிசையில் ஆயிரக்கால் மண்டபமும் உள்ளன. ஆயிரக்கால் மண்டபம் அற்புதமான சிற்பங்களுடன் தற்போது ஆலய அரும்பொருட்காட்சியகமாக அமைந்துள்ளது. இது 250 அடி நீளமும் 240



விண்ணை முட்டும் கோபுரம்

அடி அகலமும் உள்ளது. இங்கு நடராசர் காட்சி தருகின்றார். இதனைக் கட்டியவர் தளவாய் அரியநாதராவார். சுவாமி கோயில் இரண்டாம் பிரகாரத்தின் வடகிழக்குத் திசையில் நூற்றுக்கால் மண்டபமும், அதில் நடராசர் சந்நிதியும் அமைந்துள்ளன. திருக்கல்யாண மண்டபம் காணத்தக்க அழகு உடையது, சென்ற நூற்றாண்டில் அமராவதி புதூர் வயிநாகரம் நாகப்ப செட்டியார் குடும்பத்தினர் அரிய திருப்பணிகள் பல செய்துள்ளனர்.

விழாக்கள்:

இக்கோயிலில் ஆண்டு முழுவதும்விழாக்கள் நிகழ்கின்றன. அவற்றுள் சித்திரைத்திருவிழா புகழ் பெற்றது. அப்போது பட்டாபிஷேகம், திக்குவிசயம், திருக்கல்யாணம், தேரோட்டம் முதலிய சிறப்புகள் நிகழும், வைகாசியிலும், பங்குனியிலும், வசந்தத் திருவிழா நடைபெறும். ஆனியில் ஊஞ்சல் விழா: ஆடியில் மீனாட்சிக்கு சிறப்புவிழா; ஆவணியில் இறைவனின் திருவிளையாடல்களைக் குறிப்பிடும் நரியைக் குதிரையாக்கியது, பிட்டுக்கு மண் சுமந்தது முதலிய அற்புதங்களோடு, பிட்டுத்திருவிழா நிகழும். புரட்டாசியில் நவராத்திரி, கலை நிகழ்ச்சிகளோடு கொண்டாடப்பெறுகின்றது. ஐப்பசியில் கோலாட்டத் திருவிழாவும், கார்த்திகையில், தீபத்திருவிழாவும் மார்கழியில் எண்ணெய்க்காப்பு திருவாதிரை முதலிய திருவிழாக்களும் தையில் பூசத்தன்று நிகழும் தெப்பமும் மாசியில் மண்டலத் திருவிழாவும் நிகழ்கின்றன. வெள்ளிக்கிழமை தோறும் ஊஞ்சல் மண்டபத்தில் ஊஞ்சல் காட்சி நிகழும். விழா நடைபெறாத நாட்களே இல்லையென்று கூறிவிடலாம்; திங்கட்கிழமை தோறும் மீனாட்சி தங்கப்பாவாடையும் வைரக் கிரீடமும் புனைந்து அருள் வழங்குகின்றாள்.

நாள் வழிபாடு:

அதிகாலை 5 மணி தொடங்கி இரவு 10 மணி வரை தொடர்ந்து எட்டு நேரங்களில்

ஊமையாக பிறந்து கவி பாடிய குழந்தை

திருநெல்வேலியிலிருந்து பதினெட்டு மைல் தொலைவில் இருக்கும் ஊரே ஸ்ரீவைகுண்டம். இவ்வூரின் வடக்கில் திருக்கயிலாயம் என்ற சிற்றூர் உள்ளது. இவ்வூரில் வாழ்ந்த சண்முகக் கவிராய ருக்கும் சிவகாம சுந்தரிக்கும் ஆண்மகவொன்று பிறந்தது. ஐந்து வயது வரையிலும் வாய்பேசாத ஊமையாகவே வளர்ந்தது அக்குழந்தை.

திருச்செந்தில் ஆண்டவனை வணங்கி வழிபட்டுத் தம்குறையை முறையிட்டுக் கொண்ட பெற்றோர், குழந்தையுடன் கோயிலில் கண்ணயர்ந்திருந்த இரவில், குழந்தை காண திருமுருகன் தோன்றினார். ஊமைக் குழந்தையின் நாவில் தமது வேல்கொண்டு எழுதினார். குழந்தைக்கு ''குருபரன்'' என்ற நாமமும் சூட்டி மறைந்தருளினார்.

முருகன் திருவருளால், ஐந்து வயது அளவும் ஊமையாகவே வளர்ந்த அந்தக் குழந்தை, உடனே பேசியதோடு திருஞானசம்பந்தர்போல் பாடவும் செய்தது. கந்தர் கலிவெண்பா என்ற அந்த அற்புத மான நூலை ஐந்து வயதில் அருளிச் செய்த குழந்தைதான் குமரக்குருபரர் என்று நம்மால் பெருமையுடன் அழைக்கப்படும் ஞானக்குழந்தையாகும்.

வழிபாடுகள் நிகழ்கின்றன. திருவனந்தல், விளாபூசை, காலசந்தி, திரிகால சந்தி, உச்சிக் காலம், சாயரட்சை, அர்த்தசாமம், பள்ளி யறை என வழிபாடுகள் நடைபெறும்.

அழகிய தங்க, வெள்ளி வாகனங்களும் பெரிய தேர்களும் விழாக்களில் அணிபெற பவனி வருகின்றன. தற்போது தங்கத்தேரும் ஆடி வீதிகளில் வலம் வர ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. பெரும் விலை மதிப்புடைய ஆபரணங்கள் உள்ளன.

வழிபட்டு அருள் பெற்றோர்:

நக்கீரர், மூர்த்தி நாயனார், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், குருஞானசம்பந் தர் முதலிய அடியவர்கள் இறைவனை வழி பட்டுப் பாடல்கள் பாடி அருள் பெற்றுள்ளனர். பீட்டர் துரை என்னும் ஆங்கிலக் கலெக்டர்; அம்மையின் அருளால் விபத்திலிருந்து தப்பி னார். அவரால் அன்பளிப்பாக வழங்கப்பெற்ற 'அங்கவடி' என்னும் மதிப்புடைய ஆபரணம் இன்றும் உள்ளது.

நக்கீரர் பாடிய 'திருவெழுகூற்றிருக்கை' சித்திரத் தேர் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

புராணச் செய்திகள்:

இறைவனே எல்லாம் வல்ல சித்தராகத் தோன்றி இந்நகரை அமைக்கச் செய்தார் என்பது திருவிளையாடற் புராணம் கூறும் செய்தி. அறுபத்துநான்கு திருவிளையாடல்கள் இறைவனால் நிகழ்த்தப்பட்ட தலமும்இதுவே. சிவபெருமான், மீனாட்சி, முருகன் ஆகிய மூவரும் பாண்டிய நாட்டு அரசாட்சியை ஏற்று நடத்தினர் என்பதும் இத்தலத்திற்குரிய சிறப் பாகும். திருவாலவாயுடையார் புராணம், பரஞ்சோதியார் திருவிளையாடல் புராணம், கடம்பவன புராணம், சுந்தரபாண்டியம், மீனாட்சி பிள்ளைத் தமிழ் முதலிய தமிழ் நூல் களும் பல வடமொழி நூல்களும் இத்தலத் தைச் சிறப்பிக்கின்றன.

ஆலய ஆட்சியும் ஆற்றும் அரும்பணிகளும்:

பெருமை மிகு இத்திருக்கோயில் மகளிர்க் கான மேல்நிலைப்பள்ளியையும் உயர்நிலைப் பள்ளியையும் நடத்தி வருகின்றது. அன்பு இல்லத்தில் ஆதரவற்ற சிறுவர்களுக்கு உணவும் உடையும் கல்வியும் வழங்குகின்றது. சித்த மருத்துவ நிலையத்தையும் முதியோர் காப்ப கத்தையும் செயற்படுத்துகின்றது. திருக் கோயில் தொடர்பான அருங்காட்சியகமும், நூல் நிலையமும் இயங்கி வருகின்றன. காலை, மாலை ஆகிய இருவேளைகளிலும் குழந்தை களுக்குப் பால்வழங்கும்பணியும் நிகழ்கின்றது. பயணிகள் தங்க ''பிர்லா தங்கும் விடுதி'' பயன்படுகிறது.

கோயில் மாநகர், விழாமலி மூதூர் என் றெல்லாம் புகழப்பெறும் இக்கோயிலைக் காணப் பல்லாயிரம் மக்கள் நாள்தோறும் வந்தவண்ணமும், கண்டு மகிழ்ந்த வண்ணமும் உள்ளனர்.

தாங்களும் வருக! வழிபட்டு அருள் நலம் பெறுக.

— — —

கந்தரநுபூதி

—அருணகிரிநாத சுவாமிகள்



காப்பு

நெஞ்சக்கன கல்லு நெகிழ்ந்துருகத்
தஞ்சத்தருள் சண்முக னுக்கியல்சேர்
செஞ்சொல்புனை மாலை சிறந்திடவே
பஞ்சக்கர வானை பதம்பணிவாம்

ஆடும்பரி வேல்அணி சேவலெனப்
பாடும்பணி யேபணி யாய்அருள்வாய்
தேடுங்கய மாமுக னைச்செருவில்
சாடுந்தனி யானை சகோதரனே (1)

உல்லாச நிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனும் நீயலையோ
எல்லாமற என்னை இழந்தநலம்
சொல்லாய் முருகா சுரபூ பதியே (2)

வானோ புனல் பார்கனல் மாருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண்டவிடம்
தானோபொரு ளாவது சண்முகனே. (3)

வளை பட்டகைம்மாதொடு மக்களெனும்
தளைபட்டழியத் தகுமோ தகுமோ
கிளைபட்டெழு சூருரமுங் கிரியும்
தொளைபட்டுருவத் தொடுவேலவனே. (4)

மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறு மொழிந்து மொழிந்திலனே
அகமாடை மடந்தையர் என்றயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே. (5)

திணியான மனோசிலை மீதுனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ
பணியாஎன வள்ளி பதம்பணியும்
தணியா அதிமோக தயாபரனே. (6)

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
கடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே. (7)

நினைவாற்றல் பெருக்கிடும் கந்தர் அநுபூதி

ஒரே நேரத்தில் செய்யப்படும் பல்வேறு விஷயங்களைக் கிரகித்துக்கொண்டு, அவற்றை முறை பிறழாமல் திருப்பிச் சொல்லும் ஆற்றல் பெற்றவர்களே அவதானிகள் எனப் போற்றப்படுகின்றனர். ஒரேநேரத்தில் செய்யப்பட்ட எட்டுச் செயல்களைத் திருப்பிச் சொல்லுபவர் அட்டாவதானி எனவும், பத்துச் செயல்களைத் திருப்பிச்சொல்பவர் தசாவதானி எனவும், பதினாறுசெயல்களைத் திருப்பிச் சொல்பவர் ''சோடாவதானி'' எனவும் அழைக்கப்படுகின்றனர்.

இன்றைய நாளில் இத்தகைய அவதானிகளை காண்பது மிகமிக அரிதாக உள்ளது. கண்பார்வை இழந்தவராய் உள்ள போதும், கோவில்பட்டியைச் சொந்த ஊராகக் கொண்டவரான ''நினைவுக் கலையேந்தல்'' இராமையா என்பவரே, இன்றைக்கு ஞாலம் புகழும் தசாவதானியாகப் போற்றப்படுகிறார். இவரை நம்முடைய தமிழக அரசும் அரசவைக் கலைஞர்களுள் ஒருவராகத் தேர்ந்தெடுத்து நியமித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அத்தகைய சிறப்பிற்குரியவரான தசாவதானி இராமையா அவர்கள், தம்முடைய நினைவாற்றலை வளர்த்தது கந்தர் அநுபூதியின் 15ஆம் பாடலே என்று தெரிவித்திருக்கிறார். ''முருகன் திருமுன் 48 நாட்கள் நின்று வீட்டிலாயினும் ஆலயத்தில் ஆயினும் அருணகிரிநாத சுவாமிகள் அருளிச் செய்த கந்தர்அநுபூதியின் 15வது பாடலைச் செபிக்க வேண்டும். இது நினைவாற்றலை வளர்க்கும்.'' என்று அவருக்கு உபதேசிக்கப்பட்டது. அந்த உபதேசத்தின் படியே தாமும் செபித்துத் தசாதவானியாகியுள்ளதைப் பெருமையுடன் கூறிப் பூரிப்பு அடைகிறார் இப்பெரியவர்.

நினைவாற்றலைப் பெருக்கிடும் கந்தர் அநுபூதி மொத்தம் 51 பாடல்களைக் கொண்டது. வடிவில் சிறியதும் மகிமையில் பெரியதுமான இந்நூல் முழுவதையுமே 48 நாட்கள் நாமும் ஓதி திருமுருகன் அருளைப் பெற்று உய்யலாமே!

அமரும் பதிகேள் அகமாம் எனுமிப்
பிமரங்கெட மெய்ப்பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம்பொரு தானவ நாசகனே. (8)

மட்டூர்குழல் மங்கையர் மையல்வலைப்
பட்டூசல் படும்பரிசென் றொழிவேன்
தட்டூடற வேல்சயிலத் தெறியும்
நிட்டூர நிராகுல நிர்ப்பயனே. (9)

கார்மாமிசை காலன் வரிற்கலபத்
தேர்மாமிசை வந்தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரிதலாரி யெனும்
சூர்மா மடியத் தொடு வேலவனே. (10)

கூகாஎன என்கிளை கூடி அழப்
போகாவகை மெய்ப்பொருள் பேசியவா
நாகாசல வேலவ நாலுகவித்
த்யாகாசுர லோக சிகாமணியே. (11)

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மாஇருசொல்லற என்றலுமே
அம்மாபொருள் ஒன்றும்அறிந்திலனே. (12)

முருகன் தனிவேல் முநிநம் குருவென்
றருள்கொண் டறியார் அறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின்றதுவே. (13)

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழிநாசி யொடும் செவியாம்
ஐவாய் வழிசெல்லும் அவாவினையே. (14)

முருகன் குமரன் குகனென்று மொழிந்து
உருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே. (15)

பேராசை எனும் பிணியில் பிணிபட்
டோரா வினையேன் உழலத் தகுமோ
வீரா முதுசூர் படவேல் எறியும்
சூரா சுரலோக துரந் தரனே. (16)

யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமேபெற வேலவர் தந்ததனால்
பூமேல்மயல் போயற மெய்ப்புணர்வீர்
நாமேல்நடவீர் நடவீர் இனியே. (17)

உதியா மரியா உணரா மறவா
விதிமால் அறியா விமலன் புதல்வா
அதிகா அநகா அபயா அமரா
பதிகாவல சூர பயங்கரனே. (18)

வடிவுந் தனமும் மனமும் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வேல் அரசே
மிடியென்றொரு பாவி வெளிப்படினே. (19)

அரிதாகிய மெய்ப்பொருளுக் கடியேன்
உரிதாஉப தேசம் உணர்த்தியவா
விரிதாரண விக்ரம வேளிமையோர்
புரிதாரக நாக புரந்தரனே. (20)

கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந்தரஎன் றிசைவாய்
வரதா முருகாமயில் வாகனனே
விரதா சுரசூர விபாடணனே (21)

காளைக்கும ரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவம்எய் தியவா
பாளைக்குழல் வள்ளி பதம்பணியும்
வேளைச்சுர பூபதி மேருவையே. (22)

அடியைக் குறியா தறியா மையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூதரனே. (23)

கூர்வேல்விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேன்அருள் சேரவும் எண்ணுமதோ
சூர்வேரொடு குன்று தொளைத்த நெடும்
போர்வேல புரந்தர பூபதியே. (24)

மெய்யேஎன வெவ்வினை வாழ்வையுகந்
தையோ அடியேன் அலையத் தகுமோ?
கையோ அயிலோ கழலோ முழுதும்
செய்யோய்மயி லேறிய சேவகனே. (25)

ஆதாரம் இலேன் அருளைப் பெறவே
நீதான் ஒருசற்றும் நினைந்திலையே
வேதாகம ஞான வினோதமனோ
தீதாசுர லோக சிகாமணியே. (26)

மின்னேநிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே அருளே
மன்னே மயிலேறிய வானவனே. (27)

ஆனாஅமுதே அயில்வேல் அரசே
ஞானா கரனே நவிலத்தகுமோ
யானாகியஎன்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலை நின்றது தற்பரமே. (28)

இல்லே எனு மாயையில் இட்டனைநீ
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே
மல்லேபுரி பன்னிரு வாகுவில்என்
சொல்லே புனையுஞ் சுடர்வேலவனே. (29)

செவ்வா னுருவில் திகழ்வே லவன்அன்
றொவ்வாத தென உணர்வித்தது தான்
அவ்வா றறிவார் அறிகின்ற தலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப்பதுவே. (30)

பாழ்வாழ் வெனுமிப் படுமாயையிலே
வீழ்வா யென என்னை விதித்தனையே
தாழ்வாவான செய்தன தாமுளவோ
வாழ்வாய் இனி மயில்வாகனனே. (31)

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையேபுரி வேடர் குலப்பிடி தோய்
மலையே மலை கூறிடு வாகையனே. (32)

சிந்தாகுல இல்லொடு செல்வமெனும்
விந்தாடவி என்றுவிடப்பெறுவேன்
மந்தாகினி தந்த வரோதயனே
கந்தா முருகா கருணா கரனே. (33!

சிங்கார மடந்தையர் தீநெறிபோய்
மங்காமல் எனக்கு வரந்தருவாய்
சங்க்ராம சிகாவல சண்முகனே
கங்காநதி பால க்ருபாகரனே. (34)

விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழல் என்றருள்வாய்
மதிவாணுதல் வள்ளியை அல்லது பின்
துதியா விரதா சுரபூ பதியே. (35)

நாதா குமரா நமஎன் றரனார்
ஓதாய்என ஓதிய தெப்பொருள்தான்
வேதாமுதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசேகரனே. (36)

கிரிவாயுவிடு விக்ரம வேலிறையோன்
பரிவாரம் எனும் பதமே வலையே
புரிவாயு மனனே பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே. (37)

ஆதாளியை ஒன்றறியேனை அறத்
தீதாளியை ஆண்டது செப்புமதோ
கூதாள கிராத குலிக்கிறைவா
வேதாள கணம்புகழ் வேலவனே. (38)

மாவேழ் சனனம் கெட மாயைவிடா
மூவேடணை என்று முடிந்திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணரும்
தேவே சிவ சங்கர தேசிகனே. (39)



வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ
சுனையோடருவித் துறையோடு பசுந்
தினையோ டிதணோடு திரிந்தவனே. (40)

சாகா தெனையே சரணங்களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வாகனனே
யோகா சிவஞானோப தேசிகனே. (41)

குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவற் றுலகோடுரை சிந்தையுமற்
றறிவற் றறியாமையும் அற்றதுவே. (42)

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே. (43)

சாடுந் தனிவேல் முருகன் சரணம்
சூடும்படி தந்தது சொல்லுமதோ
வீடும் சுரர்மாமுடி வேதமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே. (44)

கரவாகிய கல்வியுளார் கடைசென்
றிரவாவகை மெய்ப்பொருள் ஈகுவையோ
குரவா குமரா குலிசாயுதகுஞ்
சரவா சிவயோக தயாபரனே (45)

எந்தாயும் எனக்கருள் தந்தையும்நீ
சிந்தாகுல மானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநாயகனே. (46)

ஆறாறையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறாஅடியேன் பெறுமா றுளதோ
சீறாவருசூர் சிதைவித் திமையோர்
கூறாஉலகம் குளிர்வித் தவனே (47)

அறிவொன் றறநின் றறிவார் அறிவில்
பிறிவொன் றறநின்ற பிரான் அலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும் வேலவனே (48)

தன்னந் தனிநின் றதுதான் அறிய
இன்னம் ஒருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையுங் க்ருபைசூழ் சுடரே. (49)

மதிகெட் டறவாடி மயங்கியறக்
கதிகெட் டவமேகெடவோ கடவேன்
நதிபுத்திர ஞான சுகாதிபவத்
திதிபுத்திரர் வீறடு சேவகனே (50)

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே. (51)

எண் வகை யோகம்

டாக்டர் பொற்கோ
தமிழ்ப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-600005.

நல்ல உடல் மனிதனுக்கு மட்டுமல்ல - நடமாடும் விலங்குகளுக்கும் உண்டு. ஆனால் நல்ல மனம் என்பது சிறப்பாக மனித இனத்துக்கே வாய்த்த ஒரு தனிப் பெறும் பேறு. மனிதன் மற்ற எல்லா உயிரினங்களிலுமிருந்து வேறுபட்டுச் சிறப்பெய்தி வாழ்வது அவனுடைய அழகான உடலால் மட்டுமல்ல. சிந்தனை கற்பனை நினைவு ஞாபகம் முதலிய அரிய ஆற்றலைப் பெற்றுள்ள மனத்தால்தான். மனம் என்ற ஒன்று இல்லையென்றால் மனிதன் மற்ற விலங்குகளைப் போல ஒவ்வொரு விலங்காக இருப்பானேயன்றிச் செயற்கரிய செயல்களைச் செய்யும் ஆற்றலைப் பெற்று மற்ற உயிர்களையெல்லாம் அடக்கியாளும் அளவுக்கு உயர்ந்திருக்க முடியாது.



இவ்வளவு சிறப்பிற்குரிய மனம் உடலோடு மிக நெருங்கிய தொடர்புடையது. இது உடல்; இது மனம் என்று தனித் தனியாகக் கண் முன்னே காட்ட முடியாத அளவுக்கு அவை இரண்டும் ஒன்று சேர்ந்துள்ளன. உடலைப் புறக்கணித்து விட்டு ஒருவன் மனத்தை வளர்க்க முடியாது. மனத்தைப் புறக்கணித்து விட்டும் ஒருவன் உடலை வளர்ப்பது அரிது. அப்படி வளர்த்தாலும் அதில் பயனில்லை. உள்ளம் உடல் இரண்டும் சிறக்கும் போதுதான் மனிதன் சிறக்கிறான்.

வயதுக்கேற்ற மன வளர்ச்சி இல்லாமல் உடல் வளர்ச்சி மட்டும் பெற்ற சில மனிதப் பிறவிகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அந்த மனிதப் பிறவிகள் தம்மைச் சுற்றியுள்ளோர்க்கு ஒரு சுமையாகவே வாழ்வதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். பொதுவாகப் பார்த்தால் வயதுக்கேற்றபடி மக்களில் பெரும்பாலோர்க்கு உடலும் மனமும் இயற்கையாகவே வளர்ச்சி பெற்று வருகின்றன. இயற்கையாக நடக்கின்ற இந்தச் செயலை நன்கு புரிந்து கொண்டு அறிவு பூர்வமாகக் கவனமாகவும் முறையாகவும் மனிதன் உடலையும் மனத்தையும் வளர்த்துப் போற்றத் தெரிந்து கொண்டால் வாழ்வில் அவன் செய்யவேண்டிய மற்ற பணிகள் எல்லாம் விரைவாகவும் எளிதாகவும் இனிதாகவும் நிறைவேறும்.

வாழ்க்கையில் பொருளாதாரச் சூழலும் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியும் தொடர்ந்து பல மாற்றங்களை உருவாக்கி வருகின்றன. இந்த மாற்றங்களுக்கேற்ப விளையாட்டு, பொழுது போக்கு, களியாட்டம் ஆகிய எல்லாவற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நமது மக்களிடமிருந்த விளையாட்டும் பொழுதுபோக்கும் களியாட்டமும் காலப் போக்கில் எவ்வளவோ மாற்றங்களுக்குட்பட்டுத்தான் வளர்ந்திருக்கின்றன. உடலையும் மனத்தையும் வளர்க்கின்ற முறைகளிலும் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதும் உண்மை. இன்றைய வாழ்விலுங்கூடப் பொருளாதார வசதிக்கும் வாழ்க்கைச் சூழலுக்கும் ஏற்ப விளையாட்டும் பொழுதுபோக்கும் களியாட்டமும் வேறு வேறு வகையில் தான் நிகழுகின்றன. இவ்வளவு வேறுபாடுகளுக்கிடையிலும் நல்ல உடலையும் நல்ல மனத்தையும் பெற எல்லோர்க்கும் உகந்த எளிய இனிய வழிகளை நம் முன்னோர்கள் கண்டறிந்து கடைப்பிடித்து வழிவழியாகக் கற்பித்தும் வந்திருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது நாம் வியந்து மகிழ்ந்து அவர்களை நன்றிப் பெருக்கோடு பாராட்ட வேண்டியுள்ளது.

நம் முன்னோர்கள் நம்முடைய பாராட்டை மட்டும் எதிர்பார்த்து எதையும் செய்யவில்லை. அவர்கள் கண்டறிந்து கடைப் பிடித்துக் காத்த அருங்கலைகள் நமக்கும் பயன்பட வேண்டும் என்பதுதான் அவர்களின் முதன்மையான விருப்பம். நல்ல உடலையும் நல்ல மனதையும் பெற அவர்கள் கடைப்பிடித்த வழிமுறைகளை ஒரு அருங்கலை

என்றே கூறவேண்டும். அந்த அருங்கலைகளை நாம் நன்கு புரிந்து கொண்டு அவற்றை நம் அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்த முயல வேண்டும். உண்மையான ஆர்வமும் தளராத ஊக்கமும் இருந்தால் எந்த அரிய கலையும் நமக்கு எளிய கலையாகவும் கைவந்த கலையாகவும் மாறிவிடும்.

அந்த அருங்கலைதான் என்ன? அதை எப்படிப் புரிந்து கொள்வது? எப்படி நடைமுறைப் படுத்துவது? நல்ல உடலையும் நல்ல மனத்தையும் பெற நமக்கு உதவுகின்ற அருங்கலையைப் பற்றி நேரடியாக நாம் பேசுவதற்கு முன்பு அது பற்றிய சிந்தனையைத் தூண்டுகின்ற சில புதுச் செய்திகளையும் இங்கே எண்ணிப் பார்ப்பதுதகும்.

இருபது வயது இளைஞன் ஒருவன் ஐந்து அடி உயரமுள்ள வேலி ஒன்றை மிகச் சாதாரணமாகத் தாண்டுகிறான். அவனை விட வளமான உடல் பெற்ற இன்னொருவன் மூன்றடி உயரமுள்ள வேலியைக் கூடத்தாண்ட முடியாமல் தடுமாறி விழுகிறான். இதற்குக் காரணம் என்ன? ஐந்தடி உயரமுள்ள வேலியைத் தாண்டியவன் அந்தக் காரியத்திற்குத் தன் உடலைப் பழக்கப்படுத்திப் பயிற்சியின் மூலமும் மன ஒருமைப்பாட்டின் மூலமும் அந்த காரியத்தைத் திறம்படச் செய்கிறான். மூன்றடி உயரத்தைக் கூடத் தாண்ட முடியாமல் தடுமாறி விழுந்தவன் போதிய பயிற்சியும் மன ஒருமைப்பாடும் இல்லாமையால் அந்தக் காரியத்தில் தோல்வி அடைகிறான். இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய செய்தி ஒன்று உண்டு. வளமான பெரிய உடலைப் பெறுவது என்பது வேறு. பக்குவம் பெற்ற நல்ல உடலைப் பெறுவது என்பது வேறு. மனிதன் வளமான பெரிய உடலை மட்டும் பெற்று விட்டால் போதாது. இந்த உடலைப் பக்குவம் பெற்றதாகவும் ஆக்கிக் கொள்ள வேண்டும். வளமானதாகவும், பக்குவம் பெற்றதாகவும் அமைந்த உடலைத்தான் இங்கு நாம் நல்ல உடல் என்கிறோம்.

எந்தவிதமான பயிற்சியும் செய்யாமல் நன்றாக உணவு உண்டு ஒருவன் தன் உடலை வளமாக வளர்த்து வைத்திருக்கின்றான் என்று வைத்துக் கொள்வோம். அவனுடைய உடல் வளமான உடல் என்று சொல்லலாமே தவிரப் பக்குவம் பெற்ற நல்ல உடல் என்று சொல்ல இயலாது. இன்னொருவன் நன்றாக உணவு உண்டு தன் உடலை வளமாக வைத்திருப்பதோடு உடலுக்குப் பயிற்சியும் அளித்துப் பக்குவப்படுத்தி வைத்திருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனுடைய உடலைத்தான் பக்குவம் பெற்ற நல்ல உடல் என்று கூற இயலும். எனவே, நல்ல உடலைப் பெறுவதற்குச் சில பயிற்சிகள் தேவை என்பது சொல்லாமலேயே விளங்கும்.

பயிற்சிகளுக்குப்பதிலாக உழைப்பையே பயிற்சியாகக் கொள்ளக் கூடாதா என்று கேள்வி எழலாம். உழைப்பே பயிற்சியாக அமைவதும் உண்டு. ஆனால் உடல் உழைப்பு எல்லா உறுப்புகளுக்கும் பொருத்தமான பயிற்சியாக அமைவது அரிது. மேலும் அளவுக்கு மீறிய இடைவிடாத உழைப்பு சில உறுப்புகளுக்குத் தீங்கு செய்வதாகவும் முடியும். ஆகவே உடலுக்குப் பொருத்தமான வகையில் பயிற்சி அளிக்கப்பட்டால்தான் உடல் பக்குவம் பெறும்.

தன் விருப்பத்திற்கு ஏற்றபடி ஒருவனுடைய உடல் இணக்கமாக இயங்கினால்தான் அந்த உடலைப் பக்குவம் பெற்ற உடல் என்று கூற இயலும். உடலின் இயக்கத்தை நுட்பமான முறையில் நெறி படுத்திக் கொள்ள என்னென்ன பயிற்சிகள் உதவுகின்றன என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும். இயற்கையான உணர்வோடு கலந்த நம்முடைய வாழ்க்கையைச் சற்று நிதானமாக எண்ணிப் பார்த்தால் நம்முடைய உணர்வுக்கும் நம்முடைய உடல் அவ்வப்போது மேற்கொள்கின்ற நிலைக்கும் நெருக்கமான தொடர்பிருக்கிறது என்பது விளங்கும்.

ஒரு மனிதனுக்குத் தன்னை மீறித் தூக்கம் வரும்போது இமைகள் கனத்துத் கண்கள் மூடுகின்றன. தலை சோர்ந்து குனிகிறது. உடல் படுக்கை நிலையில் கிடக்க விரும்புகிறது. தூக்க உணர்வுக்குப் படுக்கை நிலை தேவைப்படுகிறது. நிறைவான உறக்கத்திற்கு முழுமையான படுக்கை நிலை தேவை.

நாம் எதையாவது ஒன்றை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு இருக்கும்போது அச்சம் தரத்தக்க சூழலில் மிகுந்த விழிப்போடு இருக்கும் போதும் கண்களை அகல விழித்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்திருக்கின்றோம். எச்சரிக்கை ஆர்வம், எதிர்பார்ப்பு ஆகிய உணர்வுகளுக்கு உடலின் நிமிர்ந்த நிலை தேவை.

மனிதன் மிகுந்த கவலையிலும் மலைப்பிலும் அகப்பட்டு இருக்கும் போது கன்னத்தில் கையை ஊன்றிக் கொண்டும் முகவாய்க்கட்டையில் கையை வைத்துக் கொண்டும் தலையைத் தாங்கிக்கொண்டு இருக்கிறான். கவலையிலும், மலைப்பிலும் தலைச் சோர்ந்துபோகிறது. அப்போது அதைத் தாங்கி கொள்கின்ற நிலை தேவைப்படுகிறது.

நாம் ஒருவரை நீண்ட நேரமாக எதிர்பார்த்துக் கொண்டு இருப்பதாக வைத்துக் கொள்வோம். நம்முடைய பொறுமையைச் சோதிக்கின்ற அளவுக்கு அவர் காலம் கடந்து வருகிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்போது நம்மையும் மீறி நமக்கு ஒரு பெருமூச்சு வருகின்றது. அந்தப் பெருமூச்சுக்குப் பிறகு ஒரு ஆறுதல் உணர்ச்சி பிறக்கிறது. அந்த ஆறுதல் உணர்ச்சியோடு உடல் ஒரு சாய்ந்த நிலையை நாடுகிறது.

உங்களுக்குத் தெரியுமா?

பொன்னும் பொருளும் மிகபடைத்த பண்டைக் காலத்து மன்னர்கள் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து ஐந்துபிரகாரங்கள், ஏழு பிரகாரங்கள், ஆயிரங்கால் மண்டபம், கோபுரம் முதலியவைகளை அமைத்துப் பலப்பல ஆலயங்களைக் கட்டியிருக்கிறார்கள். அவ்வாறு கட்டிய மன்னர்கள் கருவறையில் இறைவனின் திருவுருவத்தைக் கல்லினாலும், எழுந்தருளும் உற்சவ மூர்த்தியைச் செம்பினாலும் அமைத்தார்கள். கோடிக்கணக்கான பொருளைச் செலவழித்துக் கோயிலை எழுப்பிய மன்னர்கள் மூலவரையும், உற்சவரையும் தங்கத்தினாலும் வெள்ளியினாலும் அமைத்திருக்கலாம் அல்லவா? அவர்களிடம் தனமும் மனமும் இருந்தும், தங்கத்தினாலும் வெள்ளியினாலும் திருவுருவங்களை அமைத்தமைக்குஎன்ன காரணம் என்பது உங்களுக்குத் தெரியுமா? தெரியவிட்டால் அதன் விளக்கத்தை அடுத்தப்பக்கத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

மிகுந்த தூக்கத்திற்குப் பிறகும்சோம்பலுக்குப் பிறகும் நாம் இயற்கையான சோம்பல் முறிக்கி றோம். அப்போது கைகளை உயரே நீட்டி உடலை மேலுக்கு இழுக்கிறோம்.

இங்கே கூறிய நிகழ்ச்சிகளை எல்லாம் சற்றுக் கவனமாக எண்ணிப் பார்த்தால் உடலின் இயக்க மும் இருப்பும் நம்முடைய உணர்வுகளோடு மிக வும் தொடர்புடையவை என்ற உண்மை நமக்குப் பளிச்சென்று விளங்கும்.

உடலின் இயக்கங்களையும் நிலைகளையும் ஒழுங்கு படுத்தத் தெரிந்துகொண்டால் நாம் நம் உணர்வுகளையும் ஒழுங்குபடுத்தலாம். உடலை ஒழுங்குபடுத்தாமல் உணர்வை நேரடியாக ஒழுங்கு படுத்துவது என்பது நடைமுறைக்கு ஒத்து வருவ தாகத் தோன்றவில்லை.

உடலின் நிலைகளும் இயக்கங்களும் நம் கண் ணுக்குப் புலப்படுகின்ற நிகழ்ச்சிகள். இவற்றை நாம் முயன்றால் ஒழுங்குபடுத்தலாம். இவற்றின் விளைவாக உணர்வுகளும் ஒழுங்குபடும். இயற்கை யான உணர்வுகள் ஒழுங்குபட்ட பிறகுதான் மனத்தை ஒருமைப்படுத்தி மனத்தை திறத்தை வளர்க்க இயலும். உடலின் நிலைகளையும் அந்த நிலைகளால் வரும் விளைவுகளையும் நன்கு ஆராய்ந்து பார்த்துத்தான் நம்முடைய முன்னோர் கள் பல்வேறு ஆசனங்களைக் கண்டறிந்து கற்பித் தார்கள். உடலின் இயக்கங்களையும் அவற்றின் விளைவுகளையும் ஆராய்ந்துதான் அவர்கள் பல வகையான ஆடல்களையும் ஆடலை ஒத்த விளை யாட்டுகளையும் கண்டறிந்து வழிவழியாகக் கற் பித்தார்கள். உடலின் இயக்கங்கள் எல்லாவற்றிற் கும் முழு முதலாக விளங்குகின்ற இயக்கம் நமது மூச்சின் இயக்கம். மூச்சின் இயக்கத்தை ஒழுங்கு படுத்தினால் உடலின் மற்ற இயக்கங்கள் தாமே ஒழுங்குபடும் என்பதை உணர்ந்து நம் முன் னோர்கள் மூச்சுப் பயிற்சியையும் ஒரு கலையாக வளர்த்து வந்திருக்கிறார்கள். உடலின் நிலை உட லின் இயக்கம் இதை பற்றிய பயிற்சிகளின் மூலம் உடலைப் பக்குவப்படுத்தும் போதே மனம் இயல் பாகத் தானே ஒருமைப்பாட்டை எய்துகிறது. இந்த ஒருமைப்பாட்டுக்குப்பின் மனத்துக்குப்பயிற்சி களைத் தந்து மனத்தின் ஆற்றலை வளர்த்துக் கொள்ளலாம்.

நமக்கு ஒருவர் மேல் அருவருப்பும் எரிச்சலும் வரும்போது அழகான மலர்ச் சோலையையும் மீன் பூத்திருக்கின்ற தெளிவான வானத்தையும் நினைத்துக் கொண்டால் நம்முடைய அருவருப்பும் எரிச்சலும் மாறி மனம் அமைதி பெறுகின்றது. நாமே வெட்கப்படத்தக்க சிறு செயல்களை மனம் நினைக்கும்போது ஒளி மிகுந்த விளக்கையும் உயர்ந்த மலையையும் நினைத்துக் கொண்டால் மனம் மாறுகின்றது. இவற்றைச் சற்று நுட்பமாக எண்ணிப்பார்த்தால் மனத்துக்கும் பயிற்சி அளித்து பக்குவப்படுத்தி அதன் ஆற்றலை வளர்க்கலாம் என்ற உண்மை நன்கு விளங்குகிறது.

உடலைப் பக்குவப்படுத்துவதற்கும் மனத்தை பக்குவப்படுத்துவதற்கும் தொடங்குவதற்கு முன்பு நம்முடைய அன்றாட வாழ்வில் நாம் கடைப் பிடிக்க வேண்டிய சில எளிய அடிப்படை ஒழுங்கு களையும் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த அடிப் படை ஒழுங்குகள் பல நூற்றாண்டுகளுக்கான நல்ல ஒழுக்கங்களுக்கு விதைபோல அமைந்தவை. அடிப் படையான சில நல்ல ஒழுக்கங்களைக் கடைப்பிடிப் பது போலவே தீமைகளுக்கு அடிப்படையான சில தீய ஒழுக்கங்களை விலக்கவும் வேண்டும். இவற்றைப் பற்றியும் நம்முடைய முன்னோர்கள் நன்கு எண்ணிப் பார்த்து விளக்கமாகப் பல வாழ் வியல் நீதிகளை வழங்கிச் சென்றிருக்கிறார்கள்.

இங்கே கூறிய எல்லாவற்றையும் சற்று விளக்கமாகத் தெரிந்து கொண்டால் அதன் மூலம் நாம் பெறுகின்ற அறிவு நல்ல உடலையும் நல்ல மனத்தையும் பெற மிகவும் உதவும் என்பது உறுதி.

(தொடரும்)

விளக்கம் இதுதான்

உலகில் காணப்படும் பொருள்களில் கல்லில் நெருப்பு அதிகமாகத் தங்கியிருப்பது கண்கூடு. ஒரு கல்லை மற்றொரு கல்லால் தட்டினால் நெருப்பு உடனே வெளிப்படுகின்றது. சிவவேள்வி வளர்த்து, அச்சிவ வேள்வியில் எழும் சிவநெறிவொளியை நிறைகுடமாகிய கும்பத்தில் சேமித்து, அக்கும்ப நீரால் நெருப்பு நிறைந்துள்ள கல் விக்கிரமாகிய கடவுளை நிறுவினார்கள். எனவே சோதிமயமான ஒளியின் ஆற்றல் அக்கற்சிலையில் அமைந்திருக் கிறது.

இனி திருவீதியில் எழுந்தருளிவரும் உற்சவ மூர்த்தி செம்பினால் அமைந்துள்ளது. அதன் கார ணம் கூறுதும். ஊருக்கு வெளியே அமைந்துள்ள மின் ஆற்றலை, ஊருக்குள்ளே பாய்ச்சும் கம்பி செம்பி னால் அமைந்திருப்பதைக் காண்க. செப்புக் கம் பிக்குப் பாய்ச்சும் ஆற்றல் உள்ளது. ஆகவே மூலஸ் தானத்தில் சேமித்துள்ள தெய்வ மின்சார ஆற் றலை ஆன்மாக்களின் உய்வு கருதி திருவீதியில் பாய்ச்சுகின்ற உற்சவ மூர்த்தியைச் செம்பினால் அமைத்த நமது முன்னோர்களின் மதிநலத்தை உன்னும்பொழுது உள்ளம் உருகுகின்றது. இன்று கண்கூடாக விளங்கும் இந்தச் சாதனங்களைக் கண்டுபிடிப்பதற்கு முன்னமேயே பல நூறு ஆண்டு களுக்கு முன் தாமிர விக்கிரகத்தைச் செய்து அதன் மூலம் ஆன்மாக்களுக்கு நமது முன்னோர்கள் நன்மை புரிந்தார்கள்.

—திருமுருக கிருபானந்தவாரியார்

பாடிய சான்றோர்கள்

என் கடன் பணி செய்து—அப்பர்

மந்திரமாவது நீறு—சம்பந்தர்

வாழ்வாவது மாயம்—சுந்தரர்



வேண்டதக்கது—மாணிக்கவாசகர்

பாரதப் போரில் பார்த்தசாரதி

—டாக்டர் த. அமிர்தலிங்கம்

(முன் தொடர்ச்சி)

வீடுமர், துரியோதனனிடம் களப்பலிக்குரிய நேரத்தைக் கணித்துத் தரவல்லவன் சகாதேவனே, களப்பலியாவதற்குப் பொருத்தம் மிகுந்தவன் அர்ச்சுனன் மகன் இராவானே என்பதை எடுத்துக் கூறியவுடன், துரியோதனன் உடனே அன்னப் பறவையின் வடிவில் செய்யப்பட்ட இயந்திர வாகனம் ஒன்றில் பறந்து, உபப்பிலாவியம் வந்து அடைகிறான். சகாதேவன் இருக்கும் இடத்திற்குத் துரியோதனன் செல்கிறான். வாஞ்சையுடன் சகாதேவனும் துரியோதனனை வரவேற்று, ஆசனத்தில் அமரவைத்து ''அண்ணாவந்தனம், தாங்கள் என்ன காரணம் கருதி என்னைத் தேடி வந்தீர்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்'' என்று விநயமாக வினவுகிறான். துரியோதனனும் '' போரில் யான் வெல்வதற்குக் களப்பலி கொடுப்பதற்கான காலத்தைக் கணித்துத் தருவாயாக'' என்றுகேட்டுக் கொள்கிறான்.

சகாதேவன், துரியோதனனை வரவேற்காமலே அலட்சியப்படுத்தி விரட்டியனுப்பியிருக்கலாம். ''போர்'' என்பது முடிவாகி விட்டதற்குப் பிறகு பகைவனான துரியோதனனுக்கு அவன் மரியாதை கொடுத்திருக்க வேண்டியதில்லை. ஆனால், பகைவராயினும் வீடு தேடி வந்தவரை வரவேற்று உபசரிக்கும் நல்ல பண்பாடு தவறாதவனாகிய சகாதேவன், துரியோதனனை வரவேற்று உபசரித்த உயர் குணம் அனைவரும் போற்றிப் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அதேபோல் பாண்டவர்களை வெல்வதற்குக் களப்பலி கொடுப்பதற்கான காலத்தைக் கணித்துத் தரத் துரியோதனன் கேட்டபோதும், ''கணித்துத்தர முடியாது; எங்கள் கண்களை நாங்களே குத்திக்கொள்வதா? எங்கள் மார்பிலே நாங்களே வேலைப் பாய்ச்சிக் கொள்வதா? துரியோதனா, துட்டன் ஆகிய நீ எங்களுக்கு நியாயமாக சேரவேண்டிய நாட்டுரிமையை மறுத்து, எங்களுடனே அநியாயமாக போருக்குத் துணிந்து விட்டதற்குப் பிறகு, உனக்கா களப்பலிக்குக் காலத்தைக் கணித்துத் தருவது? இது நடவாத காரியம்'' என்று மறுத்தும் ஏசியிருக்க முடியும். ஆனால் அவ்வாறு செய்கிறானா சகாதேவன் என்றால் இல்லை. வஞ்சகத் துரியோதனனை வஞ்சகத்தினாலேயே வெல்ல சதிசெய்தும் சகாதேவன் தீமையான நேரத்தைக் கணித்துத்தந்து துரியோதனனை ஏமாற்றி யிருக்கலாம். அப்படியும் செய்கிறானா சகாதேவன் என்றால் செய்யவில்லை.

''உன்னொருவனால்தானே நாங்கள் பலப்பல கொடுமைகளுக்காளானோம். எங்களை வெல்வதற்கா காலம் கணித்துத் தரக் கேட்கிறாய், காலமும் நேரமும் பார்க்காமலே, இதோ இங்கேயே உன்னைக் கொன்று போருக்கே தேவையின்றிச் செய்துவிடுகிறேன்'' என்று கூறியும் சகாதேவன் சீறிப் பாய்ந்திருக்கிலாம். அப்படியாவது செய்கிறானா என்றால் அதுவும் செய்யவில்லை. பகைவனான துரியோதனனைப் பக்கம் அமரவைத்துப் பஞ்சாங்கத்தைப் புரட்டி ''நடைபெறும் மார்கழி மாதத்தில், சூரியனும் சந்திரனும் கூடும் அமாவாசை நாள் நள்ளிரவில் களப்பலி கொடுத்தால் உங்கள் வெற்றி நிச்சயம்'' என்று சகாதேவன் காலத்தை கணித்துக் கொடுக்கிறான் என்றால், அவனுடைய நேர்மையை நாம் எப்படி பாராட்டுவது! தீர்ப்பளிக்கவேண்டிய நீதிபதியும், வைத்தியம் பார்க்க வேண்டிய மருத்துவரும், மதிப்பெண் தரவேண்டிய ஆசிரியரும், நல்ல நேரம் கணித்துத் தரவேண்டிய ஜோதிடரும் எதிரிகளுக்கும் கூட நியாயமானதையே செய்ய வேண்டும் என்ற தொழில் தருமத்தைச் சரித்திரத்தில் முதல் முதலாய் வற்புறுத்துபவனாகச் சகாதேவனே விளங்குவதைக் காணுகின்றோம்.

சகாதேவன் இப்படி ''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு'' என்ற நெறிப்படியும், தொழில் தருமத்தின் படியும் முகூர்த்தம் குறித்துக் கொடுக்க ,தான் வந்த வேலையில் ஒரு பாதி முடிந்ததாக மகிழ்ச்சி கொள்கிறான் துரியோதனன். அர்ச்சுனன் மகன் இராவானுக்கும் தன்னுடைய வருகையைத் தெரிவித்து துரியோதனன் ஆள்விட, அவனும் பண்புக்கு இலக்கணம் வகுத்த பாண்டவர் வழி வந்தவன் ஆதலால் துரியோதனனை வந்து வணங்கி ''தந்தையே, என்னை அழைத்தமைக்கு யாது காரணம், கூறுங்கள்'' என்று கூறி வணங்கி நிற்கின்றான். ''நீ எங்களுக்காக களப்பலியாக வேண்டும்'' என்று நாகூசாமல் தான் வந்த காரணத்தைத் தெரிவிக்கின்றான் துரியோதனன். ''எங்களில் உங்களைப் போல் மறுத்து இரண்டு உரைப்பார் இல்லை கண்டாய்'' என்பதாக இராவான் துரியோதனனின் நேர்மையின்மையைக் குத்திக் காட்டி ''என்னைக் களப்பலி கொடுப்பதற்கு உடன்படுகிறேன்'' என்பதாகக் கூறி தன்னைப் பலிகொடுக்கச் சம்மதிக்கிறான். இந்திரன் கேட்க கர்ணன் கவச குண்டலங்களைக் கொடுத்துப் புகழ் கொண்டான். துரியோதனன் கேட்க இராவானோ தன்னையே தான் கொடுக்கச் சம்மதிக்கிறான் என்றால் ''ஆயிரம் கர்ணன்கள் ஒரு இராவானுக்கு இணையாவரோ'' என ஆன்றோர்கள் போற்றும் வண்ணம் இராவான் புகழின் இமயத்தைத் தொட்டுவிடக் காணுகின்றோம்.

இந்த இராவான் மகாபாரதத்தில் ஒரு மறக்க முடியாத பாத்திரம், அபிமன்யூ வச்சலா திருமணத்தின்போது இந்த இராவானின் வீரத்தை முதன்

குன்றெடுத்து ஆயர் மாதர் குரவை கொண்டொரு விளாவிற்
கன்றெடுத் தெறிந்து வெய்ய காளியற் கிருதாள் நல்கி
அன்றெடுத்திறுத்த வில்லே யனையவில் விழவு காண்பான்
சென்றெடுத்திறுத்து நின்ற செங்கண்மால் எங்கள் கோவே.

—களப்பலியூட்டுச் சருக்கம், கடவுள் வாழ்த்து.

முதலாகக் காண முடிகிறது. இராவணன் தம்பி கும்பகர்ணனை ஒரு தோளிலிருந்து தொடங்கி மறுதோள்வரை பார்த்து முடிக்கப் பல நாள்ஆகும் என்று குறிப்பிடுவார் கம்பர். அப்படிப்பட்ட உருவத்தோற்றம் கொண்டவனே இராவானும். தீர்த்த யாத்திரை புறப்பட்ட போது அர்ச்சுனன் உலூபி என்ற நாகக்கன்னியை மணம் முடிக்க அவள் வயிற்றில் தோன்றியவனே இராவான். இவன் ''புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?'' என்ற முதுமொழிக்கு ஏற்ப, தோற்றத்தில் தன் பெரிய தந்தை வீமனைப் போலவும், வீரத்தில் தந்தை அர்ச்சுனனைப் போலவும், குணத்தில் தம் முதல் பெரிய தந்தை தருமரைப் போலவும்,விளங்கினான். இப்படி அவன் வளர்ந்து வாலிபனான நேரத்தில்தான் அபிமன்யுவிற்காக உறுதி கூறப்பட்டிருந்த தம் மகள் வச்சலாவை பாண்டவர்கள் அரசினை இழந்து வனவாசம் செல்ல நேரிட்ட காரணத்தால், துரியோதனன் மகன் இலட்சண குமாரனுக்கு மணம் முடிக்க முடிவு செய்திருந்தார் பலராமர். கிருட்டிணருக்கோ அர்ச்சுனன் மகன் அபிமன்யுவிற்கே வச்சலாவை மணம் முடித்துத்தர வேண்டும் என்பது விருப்பமாக இருந்தது. ஆனால் அவருடைய விருப்பத்திற்கும் செவி சாய்க்காமலே பலராமர், இலட்சண குமாரனுக்கு வச்சலாவை மணம் முடித்துக் கொடுப்பதில் உறுதியாக இருந்தார்.

துவாரகாபுரியை நோக்கி துரியோதனன் அளவில்லாத படைகளுடன் புறப்பட்டு மணவிழாவிற்காக வந்து கொண்டிருந்தான். வழியில் இரண்டு மலைகளுக்கு இடைப்பட்டிருந்த ஒரு பாதை வழியாக அவர்களின் படைகள் செல்ல வேண்டி இருந்தது. ஒரு மலையில் அமர்ந்தபடி மற்றோரு மலைக்குத் தன்னொரு காலை நீட்டி ஒரு கையில் நீண்ட வாளைப் பிடித்தபடி மற்றொரு கையால் அவ்வாளை தீட்டியவாறு அமர்ந்திருந்தான் இராவான். துரியோதனனின் படைகள் அவ்வழியாக வந்தன. ''யார் இவர்கள்? எங்கே போகிறார்கள்?'' என்று கண்களால் படைகளை அளந்து கொண்டிருந்த இராவானை நோக்கித் துரியோதனன் சப்தமிட்டான். ''ஏய், யார் நீ? காலை எடு, எங்கள்படை இந்த வழியாகப் போகவேண்டும்''. இராவான் உடனே இடி இடிப்பதைப் போல் நகைத்து ''நான் காலை எடுக்க முடியாது, இஷ்டமிருந்தால் காலுக்குள், புகுந்து போங்கள்; இஷ்டமில்லா விட்டால் வந்த வழியே திரும்பிப் போங்கள்''. இப்படி பதிலை உரைத்து விட்டு மறுபடியும் வாளைத் தீட்டிக் கொண்டிருந்தான் இராவான். தன்னுடைய தந்தைமார் பாண்டவர் ஐவரைத் துரியோதனன் காட்டிற்கு அனுப்பிவிட்ட கொடுமையை உலூபி கூறக் கேட்டிருந்தவனாகிய இராவான், துரியோதனனையும், அவனுடைய கூட்டத்தையும் பதம் பார்க்கவே அந்த ஒரு மலையில் அமர்ந்து, மற்றொரு மலைக்குக் காலையும் நீட்டி, வாளையும் தீட்டிக் கொண்டிருந்தான். தன்னுடன் வாதிடுபவன் துரியோதனனே என்பதை இராவான் அறிந்து கொண்டிருப்பானேயானால் அந்த நேரமே அவனுடைய படைகளை அங்கேயே வைத்துப்பந்தாடியிருப்பான். அவனுக்குத் துரியோதனன் யாரென்று தெரியாது. துரியோதனனுக்கும் இராவானை அப்பொழுது அர்ச்சுனன் மகன் என்று தெரியாது. இராவானிடம் மீண்டும் வாய்க்கொடுக்கப்போன துரியோதனனை வீடுமரே அடக்கி ''நாம் திருமண காரியமாகப் போகிறோம், போகும்போது எதற்கு வீண் வம்பு? அவன் காலை நீட்டிக்கொண்டிருப்பதோ மலையின் மேலே. நம் பாதை ஒன்றும் அதனால் தடைப்பட்டு விடவில்லையே. பேசாமல் போங்கள்' என்று கூறி அடக்கிவிட, துரியோதனனும் அவன்

விதியை மதியால் வெல்லலாம்

விதியை மதியால் வெல்லமுடியும்., அந்தமதி சிவாயநம எனச் சிந்தித்திருப்பதே என்கிறார் ஒளவையார்.

''சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை—உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.''

படைகளும் இராவான் கால் நீட்டியிருந்த அந்த நிலையிலேயே மலைப்பாதையின் வழியே புகுந்து செல்லலாயினர். இப்படி துரியோதனாதியரை முதற் பார்வையிலேயே மிரட்டிப் பணிய வைத்த மாபெரும் வீரன் தான் இராவான். துரியோதனாதியரை மரியாதையின்றி நடத்திய இராவான், வீடுமரின் சிறந்த தோற்றத்தைக் கண்டு அவருடைய வயதிற்கும் தோற்றத்திற்கும் மரியாதை கொடுத்து, அவர் அந்தப்பாதையைக் கடந்து செல்ல நேரிட்டபோது மட்டும், தான் நீட்டியிருந்த காலை மடக்கி வழிவிட்டான் என்றால் அவன் பண்பிலும் சிறந்தே விளங்கினான் என்பது விளங்குகின்றது அல்லவா.

இப்படி துரியோதனனும் அவன் படைகளும் அந்த மலைப்பாதை வழியாகச் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் கடோற்கஜனும், அபிமன்யுவும் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். தன் அன்னை இடும்பியின் கட்டளைப்படி, தம்பி அபிமன்யுவிற்கு வச்சலாவை மணம் முடித்து வைக்கவே கடோற்கஜன் அபிமன்யுவை அழைத்துக் கொண்டு துவாரகாபுரியை நோக்கி வந்து கொண்டிருந்தான். தான் செல்லும் பாதையில் இராவான் காலை நீட்டிக் கொண்டிருப்பது மரியாதைக் குறைவாகப் பட்டது கடோற்கஜனுக்கு. ''ஏய் காலை எடு, நாங்கள் போகவேண்டும்'' என்று கடோற்கஜன் கட்டளையிட இராவானும் அதற்குப் பணியாமல் ''இஷ்டமிருந்தால் காலைக் கடந்து போ, இல்லாவிட்டால் வந்த வழியே திரும்பிப் போ'', என்று முழங்கினான். இடும்பி என்ற அரக்கி ஈன்ற வீர கடோற்கஜனா திரும்பிப் போவான்? கையில் கதையோடு கடோற்கஜன் பாய, கத்தியால் கதையைத் தடுத்து இராவான் மோத, அங்கே மலைகள் மோதிக்கொண்டதைப் போல மாபெரும் யுத்தம் நடந்தது. வீர இராவானின் பராக்கிரமத்தைக் கண்ட கடோற்கஜனே இறுதியில் வியந்து போய் ''வீமன் மகனாகிய இந்த கடோற்கஜனையே அயரவைத்து விட்டாயே, நீ நல்ல வீரன் தான்'' என்று பாராட்ட, அதைக் கேட்ட இராவானும் கத்தியைக் கீழே போட்டு, கடோற்கஜனுடைய கால்களைப் பணிந்து ''அண்ணா, என்னை மன்னித்து விடுங்கள். நான் தான் அர்ச்சுனன் மகன் இராவான், தெரியாமல் உங்களிடம் போர் செய்து விட்டேன்'', என்று மன்னிப்பைக் கேட்டுக்கொண்டான். அதன்பிறகுதான் தன் தம்பி அபிமன்யு திருமணம் புரியவேண்டிய வச்சலாவைத் துரியோதனன் மகன் திருமணம் புரிய போவது தெரிகிறது இராவானுக்கு. ''அடடா, கொஞ்ச நேரத்திற்கு முன்பு இந்த வழியாகப் போனது கொடியவன் துரியோதனனின் படைகள் என்று தெரியாமல் போயிற்றே. தெரிந்திருந்தால், அவர்களை இங்

கேயே துவம்சம் செய்திருப்பேனே'', என்று இராவான் கூறிப்பின் கடோற்கஜனுடன் சேர்ந்துசென்று துரியோதனன் படைகளை நாசப்படுத்தி, அபிமன்யுவிற்கு அவன் மனம் போலவே வச்சலாவைத் திருமணம் முடித்து வைப்பதை, மகாபாரதம் கூறுகின்றது.

இப்படி கடோற்கஜனாலும் வியக்கப்பட்ட மாபெரும் வீரன் தான் இராவான். இவனுடைய வீரத்தை வீடுமரும் கூடப் பாராட்டி

''ஒன்றநம் படைகள்எல்லாம் ஒருபகற்பொழுதிற் கொல்வான்
நின்றனன் இராவான்என்பான் நீயவன்தன்னை வேண்டிற்
கொன்றெனைப் பலிக்கொள் என்று கூறும் அக் குமரற் கொன்றால்
வென்றுனக் கரசும் வாழ்வும் எய்தலாம்''

—முகூர்த்த கேள்விச் சருக்கம்: 3.

என்று இராவானின் வீரத்தையும், அருங்குணத்தையும் ஒருங்கே பாராட்டி உரைப்பதைக் காணுகின்றோம். இப்படிப்பட்ட மாவீரன் இராவான்தான் இரந்தவனுக்கு இல்லை என்றுரைப்பது நற்குடிப் பிறந்தார் குணமாகாது என்பதனால் ,துரியோதனனுக்குக் களப்பலியாக உடன்படுவதைமேலே கண்டோம்.

சகாதேவன் காலம் கணித்துக் கொடுக்க, ''உன்னைப்போல் நாங்கள் பேச்சு மாறுகிறவர்கள் இல்லை'' என்று குத்திக் காட்டினாலும், இராவானும் களப்பலிக்கு உடன்பட்டுவிட துரியோதனன் மகிழ்ச்சியோடு மீண்டும் இயந்திர விமானம் ஏறி அத்தினாபுரம் போய்ச் சேர்ந்து விடுகின்றான். இவற்றையெல்லாம் தெரிந்து கொள்கிறார் கண்ணபெருமான். சகாதேவன் குறித்துக் கொடுத்த முகூர்த்தத்தில், இராவானைத் துரியோதனன் களப்பலி கொடுத்து விட்டால், வெற்றி நிச்சயம் துரியோதனனுக்கே என்பது தெரிந்த பிறகும், கண்ணபெருமான் எப்படி அதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியும்? துரியோதனனின் சூழ்ச்சியை மாற்ற வல்ல சூழ்ச்சியைப் புரிவதற்கும் வல்லவர் அவர் ஒருவரேயல்லவா? ஆகவே, தான் பௌர்ணமிக்குப் பின் பதினைந்தாம் நாள் வருகின்ற அமாவாசையைப் பதினான்காம் நாளே வருமாறு மாற்றியருளுகிறார் கண்ணபெருமான். ஆக்கவும், அழிக்கவும் வல்ல அவரால் முடியாதது ஏதும் இல்லை என்பதைத்தானே அவருடைய பெருமையைப் பாராட்டும் புராணங்கள் கூறுகின்றன. மனிதருக்குத் தன்னைக் கொல்ல வலிமை ஏது என்ற மமதையினால், இராவணன் இறைவனை வேண்டி வரம் பெற்ற போது மனிதரால் தனக்கு சாவு உண்டாகாதிருக்க வரம் வேண்டாத காரணத்தால், இராமனாக மானிட அவதாரம் எடுத்து வதைத்தவரல்லவாஅந்தப் பரம்பொருள். இரவிலும், பகலிலும் தனக்கு மரணம் நேரக்கூடாதெனவும், வேறு பல விதங்களிலும் தனக்கு மரணம் நேரக்கூடாதெனவும், இரணியன் வரம் வேண்டிப்பெற அவனுக்கு அளிக்கப்பட்ட வரத்தின்படியே இரவும் பகலுமற்ற அந்திப்பொழுதில், நிலமும், நீருமற்ற இடமாகிய தம்மடியில் வைத்து, எந்த ஆயுதங்களும் ஏந்தாமல் தம் கையையே ஆயுதமாகக் கொண்டு, மனிதனும் மிருகமும் அல்லாத நரசிம்மமாகத் தோன்றி இரணியனை வதைத்தவரல்லவா அந்தப் பரம்பொருள். அவருக்கா அற்ப துரியோதனனின் சூழ்ச்சியை மாற்றஅமாவாசையை மாற்றத் தெரியாது. பன்னீராயிரம் முனிவர்களை வரவழைத்து பௌர்ணமிக்குப் பின் வரும் பதின்

பரம்பரைக் கோவில்களை அரசாங்கம் ஏற்கும்

தமிழ்நாட்டில் பரம்பரை தர்மகர்த்தாக்கள் நிர்வாகத்தின் கீழ் உள்ள கோவில்களின் எண்ணிக்கை 3,850. அந்த கோவில்களுக்குச் சொந்தமான நிலத்தின் பரப்பளவு 89,979 ஏக்கர் 82 சென்ட் ஆகும்.

இந்தக் கோவில் மற்றும் அதன் நிலங்களின் நிர்வாகத்தைப் பரம்பரை ஆதீனகர்த்தர்கள் தங்கள் தனி உரிமையாக வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதைக் கண்காணிக்க அரசு நிர்வாகிகளை நியமித்தால் அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தடை வாங்கி விடுகிறார்கள்.

ஆகவே அவர்கள் கொடுக்கும் வரவு-செலவு கணக்கைத்தான் நாம் பெற்றுக் கொள்ள வேண்டியது இருக்கிறது. அந்த பரம்பரைத் தர்மகர்த்தாக்களின் ஆலயத்தையும் அரசே மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுக்காலமாக இருந்து வருகிறது.

அது பற்றி ஆராய மத்திய அரசு சர் சி.பி. இராமசாமி அய்யர் தலைமையில் ஒரு குழுவை அமைத்து அந்தக் குழு கொடுத்த சிபாரிசுகளில் கோவில்களை அரசின் நிர்வாகத்துக்குள் உட்படுத்த வேண்டும் என்று கூறி இருக்கிறார்கள்.

ஆனால் பரம்பரைத் தர்மகர்த்தாக்களோ அதன்படி அதிகாரிகளை நியமித்தால் அரசியல் சட்டத்தில் உள்ள அடிப்படை உரிமைகள் தங்களுக்கு மீறப்படுகின்றது என்று கூறி உயர்நீதி மன்றத்தில் தடையும் வாங்கி இருக்கிறார்கள்.

அதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று இங்கு 2 சபைகளிலும் தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி 3 ஆண்டுகள் ஆகியும் இன்னும் ஒப்புதல் வரவில்லை.

ஆலய நிர்வாகம் பற்றிய விஷயம் அரசியல் சட்டத்தின் பொது பிரிவில் சேர்க்கப்பட்டு இருப்பதால் அதற்கு ஏற்ப இந்த சட்டத் திருத்தத்தை முன்னதாகவே மத்திய அரசுக்கு அனுப்பினோம். அவர்கள் சம்மதம் பெற்று இங்கு சட்டசபையில் நிறைவேற்றி அனுப்பி 3 ஆண்டுகள் ஆகியும் ஒப்புதல் வரவில்லை. அந்த அளவுக்கு மாநில அரசின் கைகள்கட்டப்பட்டு இருக்கின்றன.

—மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்த விளக்கம்.

புதிய கல்வெட்டு கண்டுபிடிப்பு

காமராசர் மாவட்டம், திருத்தங்கல் கிராமம் நின்ற நாராயணப்பெருமாள் கோயிலில் பண்டைய கல்வெட்டு ஒன்றை தமிழக அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுள்ளது. இக்கல்வெட்டு கோயில் முன் மண்டபத்தின் முன்னே தரையில் பாவு கல்லாக போடப்பட்டுள்ளது. பராந்தக நெடுஞ்சடையன் என்ற புகழ் வாய்ந்த பாண்டிய மன்னனின் 38வது ஆண்டில் அதாவது கி.பி.806ல் இக்கோயிலுக்கு நல்லூர்க்கிழான் என்பவர் விளக்கு எரிக்க 100 ஆடுகள் கொடுத்ததை இது குறிக்கிறது. கல்வெட்டு இவ்வூரை திருத்தங்கால் என்றும், கோயிலை திருவேங்கடநிலைப் பெருமான் அடிகள் கோயில் என்றும் அழைக்கிறது. இக்கோயில் 108 வைணவத் தலங்களில் ஒன்று. ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட பதி. இக்கோயிலில் இதுவே மிகவும் தொன்மையான கல்வெட்டாகும். இப்பாண்டிய மன்னன் பரம வைஷ்ணவன் என்று பிற செப்பேடுகளில் குறிக்கப்படுகிறான். இப்புகழ் வாய்ந்த வைணவபதியின் வரலாற்றுக்கு இக்கல்வெட்டு மேலும் ஒளியூட்டுகிறது.

இதனை மதுரை அரண்மனை வரலாற்றுக் காட்சியக காப்பாட்சியர் திரு. வே. வேதாசலம் என்பவரும், கல்வெட்டாய்வாளர் திரு. சு. இராஜகோபால் என்பவரும் கண்டறிந்துள்ளனர்.

நான்காம் நாளாகிய சதுர்த்தசியையே அமாவாசையாகக்கொண்டு, கொண்டாடவேண்டும் என்கிறார். முனிவர்களும் அவ்வாறே ''தங்கள் கட்டளைப்படியே ஆகட்டும்'' என சதுர்த்தசியை அமாவாசையாகக் கொண்டாடுகின்றனர். சதுர்த்தசி எப்படி அமாவாசையாகும் என்பது சந்திர சூரியர்களுக்கே விளங்கவில்லை. இருவரும் கண்ணபெருமானையே கேட்டுச் சந்தேகத்தைத் தெளிந்து கொள்வோம் என்பதாக எண்ணி வருகிறார்கள். அருகருகே ஆசனம் இட்டு, அவர்களை அமரவைத்து கண்ணபெருமானும், ''உங்களுக்கு என்ன ஐயமோ கேளுங்கள்'' என அவர்கள் ''இன்று சதுர்த்தசி தானே, இன்றைக்கு எப்படி அமாவாசையைக் கொண்டாட முடியும்?'' என வினவுகிறார்கள். அதற்குக் கண்ணபெருமானும் தமக்கொன்றுமே தெரியாதவரைப் போல், ''அமாவாசை என்றால் என்ன?'' என்று கேட்க, இருவரும் ''சந்திரனும் சூரியனும் ஆகிய நாங்கள் இருவரும் கூடும் நாளே அமாவாசை'' என்று பதில் கூறுகிறார்கள். கண்ணபெருமானும் நகைத்தபடியே ''நீங்கள் இருவரும் கூடும் நாள் அமாவாசை என்றால் இப்பொழுது இருவரும் ஒன்றாகக் கூடித்தானே இருக்கிறீர்கள்,'' எனக் கூறி, அவர்களைச் சுட்டிக்காட்ட ''ஆமாம், நாங்கள் இருவரும் கூடித்தான் இருக்கிறோம், இன்று அமாவாசைதான்'' என்று அவர்கள் இருவரும்கூடத் தங்கள் இசைவைக் கண்ணபெருமானுக்குத் தெரிவித்து விடைபெறுகிறார்கள். பாரத காவியத்தை தமிழில் பாடிய வில்லிப்புத்தூராருக்குப் போர் என்றால் பெரு விருப்பம் போலும், கண்ணபெருமானின் தூதினை விரிவுபடப் பாடிச் சென்ற அவர், துரியோதனன் சகாதேவனிடம் முகூர்த்தம் கேட்டதையும், இராவான் களப்பலிக்கு உடன்பட்டதையும், மிகச் சுருக்கமாகப் பாடியுள்ளார். அவ்வாறே கண்ணபெருமான் சதுர்த்தசியை அமாவாசை ஆக்கிய முக்கிய நிகழ்ச்சியினையும் மிகச் சுருக்கமாகவும், மிக வேகமாகவும் பாடிக் கொண்டு போகிறார்.

இதோ பாருங்கள், ஒரு பாடலிலேயேஎவ்வளவு வேகமாக நிகழ்ச்சிகளை அவர் விரைந்து சொல்லிச் செல்கிறார் என்பதை.

''கொடுத்தனன் பலிக்குத் தன்னைக் குமரன்
என்று அறிந்து குன்றம்

எடுத்தவன் திதி பன்னான் கினிடை உவா
இன்றாகென்று

தொடுத்த நூன் முனிவரோடும் சொல்லினன்
சுடர்கள் தம்மில்,

அடுத்ததிங்கென்னை யென்ன அன்றது வாய
தன்றே''.

—களப்பலியூட்டுச் சருக்கம்: 2.

இவ்வாறு சதுர்த்தசியை அமாவாசையாக்கி விட்ட கண்ணபெருமான், பாண்டவர்களின் அவையைக் கூட்டி, இராவான் துரியோதனன் வேண்ட, தன்னை அவனுக்குக் களப்பலி கொடுக்க உடன்பட்டுவிட்டதையும், பாண்டவர்களுக்கு முன்பாகத் துரியோதனன் களப்பலி கொடுத்துவிட்டால், வெற்றி நிச்சயம் அவனுக்கே கிட்டிவிடும் என்பதையும் எடுத்துக் கூறுகிறார். ''சதுர்த்தசியை நான் அமாவாசையாகக் கொண்டாட வைத்துவிட்டதை அறியாதவனாகிய துரியோதனன், மறுநாளேஅமாவாசை என்று எண்ணி ஏமாந்திருக்கும் இந்த நேரத்தைப்பயன்படுத்தி களப்பலியை நாம் இன்றே இன்று நடு இரவு நேரத்திலேயே கொடுத்துவிட வேண்டும். களப்பலி கொடுப்பதற்கு உத்தமகுணங்கள் பொருந்த அமைந்தவர்கள் இருவர் மட்டுமே இந்த அவையில் இருக்கிறார்கள். ஒருவன் இராவான், அவனோ பகைவன் துரியோதனனுக்குக் களப்பலி ஆக உடன்பட்டுவிட்டான். களப்பலிக்குப் பொருந்தக்கூடிய உத்தம குணங்கள் வாய்க்கப் பெற்ற இருவரில் மற்றொருவராகிய என்னை நீங்கள் களப்பலிகொடுக்க, நான் உடன்படுகிறேன். உங்கள் வெற்றி ஒன்றே என் இலட்சியம். நான் தயார், இப்பொழுதே புறப்பட்டால்தான் சகாதேவன் குறித்துக் கொடுத்த முகூர்த்தம் தப்பாது. காளிகோயிலுக்குச் சென்று அவள்முன் என்னைப் பலி தருகிறேன். புறப்படுங்கள்'' என்றுகண்ணபெருமான் தம்மையே பாண்டவர்களுக்குப் பலிகொடுக்க முன் வருகிறார். ஆனால் பாண்டவர்களோ பரம்பொருளாம் கண்ணபெருமானின் பாதத்திலே விழுந்து வணங்கி, ''ஐயனே ,நீர் களப்பலியாதல் கூடாது, எங்களுக்குப் போரிலே தோல்வி நேரினும் நேரட்டும், நாடு கிட்டாமல் போனாலும் போகட்டும், உம்மைப் பலி கொடுக்க இசையமாட்டோம். அப்படிப்பட்ட வாழ்வும் வளமும் வேண்டவே வேண்டாம்.'' என்று தொழுதும் அழுதும் கண்ணபெருமான்மேல் தாம் கொண்டிருந்த பெரும்பக்தியைப் புலப்படுத்துகிறார்கள். பாண்டவர்கள் தம்மேல் கொண்டிருக்கும் பக்தியையும், பேரன்பினையும் கண்ணபெருமானும் மிக நன்றாகவே அறிவார். அவர் தம்மைப் பலிகொடுக்க கேட்டுக் கொண்டதற்குக் காரணமே அதைத் தடுக்கும் விதத்தில் இராவான் பாண்டவர்களுக்கு பலியாக முன்வரக் கூடிய எண்ணத்தை உண்டாக்கவேண்டும் என்ற

கருத்தினால்தான். அவருடைய எண்ணம் வென்றது. கண்ணபெருமானின் கால்மலர்களில் விழுந்து, தம் தந்தைமார்கள் கண்ணீர் சிந்துவதைத் தாங்கிக் கொள்ள முடியாதவனாகிய இராவான் ''என்னை நான் உங்களுக்காக இப்பொழுதே களப்பலிகொடுக்கச் சித்தமாக இருக்கிறேன். கவலையை விடுங்கள். துரியோதனன் வந்து கேட்டபோது, இல்லை என்று சொல்வது பண்புள்ளவர்களுக்குத் தகாதே என்று அவனுக்குக் களப்பலியாக உடன் பட்டது உண்மைதான். ஆனால் அவனோ அமாவாசையன்று என்னைக் களப்பலி கொள்வதாகக் கூறிச்சென்றவன், குறித்த நேரம் வந்தும்கூட என்னைப் பலிகொள்ள வராத காரணத்தால், அற்பனுக்காக போக இருந்த உயிர் என்னைப் பெற்ற அப்பன்களுக்காகப் போகட்டும், என்னைப் பலி கொடுத்து வெற்றி கொள்ளுங்கள்'' என்று கேட்டுக் கொள்கிறான். உடனே கண்ண பெருமானும், ''என்னினும் பொருத்தமானவன் நீயே. இனி நாம் வெற்றிப்பெற எந்தத் தடையும் இல்லை'' என்பதாக இசைந்து கூற, சகாதேவன் குறித்துக் கொடுத்த சரியான முகூர்த்தத்தில் போர்த் தெய்வமாகிய காளிக்குக் களப்பலியாக இராவானைக் கொடுக்கிறார்கள்.

> ''மெய்வரு காளிமுன்னர் மெய்யுறுப் பனைத்தும் வீரன்
> கொய்தரு நிலையிற் கொய்து கொடுத்தனன்'
>
> ''ஆண்டகை கன்னிமுன்னர் அவயமனைத்தும் ஈந்து
> காண்டக மலர்ந்த தீபமென முகங்கவின நின்றான்'

காலில் சிறுமுள் குத்திவிட்டாலும் அதை எடுக்கும் வலி தாங்கமுடியாமல் அரற்றுகின்ற பலரை நாம் காணலாம். உயிரை விட்டுவிடுவது என்பது சுலபம். நோகாமல் உயிரைப் போக்கடித்துக் கொள்ள எத்தனையோ மருந்துகளும், வழிமுறைகளும் கூட உள்ளன. காளி தேவியின் முன் நின்று, தன்னுடைய உடல் உறுப்புக்களை முகமலர்ச்சி மாறாமல் தானே ஒவ்வொன்றாக அறுத்து யாமளம் என்ற நூலில் முன்னோர்கள் வகுத்துத் தந்த இலக்கணத்தின்படி பலி தருவது என்பது இராவான் என்ற பலவானுக்கு மட்டுமே ஆகும் என்பதை தான் மகாபாரதம் காட்டுகிறது. முகமலர்ச்சி மென்மேலும் கூட களப்பலி கொடுக்க இருவருக்கு மட்டுமே இயலும் என்பதைக் கண்ணபெருமானும் கூறினார் அல்லவா! ''ஒன்று தாம், மற்றொன்று இராவான்'' அத்தகைய இராவானுக்கு கண்ணபெருமான் மகிழ்ந்து இறவாத வரம் தருகிறார். களப்பலியாக இராவான் அவனைக் கொடுத்துவிட்ட போதும் ,அவன் இறவாதவனாகவே அவ்வுடலுடனே இருந்து, மாபாரதப் போரினைக் காணவும், காண்பதோடு போரிலும் பங்கேற்று பகைவர்களைப் பந்தாடவும் அவனுக்கு வரம் அருளுகிறார் கண்ண பெருமான்.

இவ்வாறாக சகாதேவன் குறித்துக் கொடுத்த நல்ல முகூர்த்தத்தில் துரியோதனனுக்கு உடன் பட்ட இராவானையே களப்பலியும் தந்து, துரியோதனின் சூழ்ச்சிகளைத் தம்முடைய சூழ்ச்சியால் முறியடித்து விடுகிறார் கண்ணபெருமான். ''மாபாரதத்துக் கண்ணா, மாயக் கலையின் மன்னா'' என்று கண்ணபெருமானைச் சும்மாவா பாடிப் போற்றியிருக்கிறார்கள்.

பாரதப்போர் தொடங்கிவிட்டது, துரியோதனன் படைக்கு வீடுமரே சேனாதிபதி.

முத்தித் தலங்கள் நான்கு

> திருவாரூரில் பிறந்தால் முத்தி
> திருவண்ணாமலையை நினைத்தால் முத்தி
> தில்லையம்பதியைத் தரிசித்தால் முத்தி
> திருக்காசியில் இறந்தால் முத்தி

பிறப்பதும் இறப்பதும் நம்கையில் இல்லை., திருவண்ணாமலையை நினைக்கவும், தில்லையம்பதியைத் தரிசிக்கவும் செய்யலாமே.

> ''பரசுடை இராமன் பாதபங்கயம் சென்னி ஏந்தி
> வரிசிலை வேதங்கற்று மற்றவன் தனையும் வென்ற
> குரிசிலைக் கங்கை தந்த குருகுலக் கோமான் தன்னை
> அரசன்வெஞ் சேனைக்கெல்லாம் அதிபதி ஆக்கி னானே''
>
> —படையெழுச்சிச் சருக்கம், 24

பாண்டவர் அணிக்கு அஞ்ஞாத வாசத்தின் போது அவர்களைப் புரந்தவனாகிய விராட தேசத்தரசனின் மகன் சுவேதன் சேனாதிபதி. இருபடை சேனாதிபதிகளும் தத்தம் படையினரைப் பாகுபடுத்திப் பிரிப்பதிலும், வியூகம் அமைப்பதிலும் ஈடுபடுகின்றனர்.

வீடுமர் தம் சேனையிலிருந்து வீரர்களை அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்தரதர் எனப் பாகுபடுத்தினார். அதிரதர் எனப்படுவோர் தாம் ஒரு தேரில் ஏறிநின்று தம் தேர்க்குதிரை, சாரதிகளுக்கு அழிவுவராமல் காத்துக் கொண்டு பிறர் துணை ஒன்றும் வேண்டாமலே பல்லாயிரக் கணக்கான தேர்வீரர்களைப் போரில் வெல்லக்கூடிய மகாவலிமை படைத்தவர்கள் ஆவர். அதிரதரை விடச் சற்றுத் தாழ்ந்தவர் மகாரதர். இவர்கள் தாம் ஒருவராகவே பதினோராயிரம் தேர் வீரர்களோடு போர் செய்து வெல்பவர் ஆவர். சமரதர் எனப்படுவோர் ஒரே ஒரு தேர் வீரரை மட்டும் எதிர்க்க வல்ல வலிமை பெற்றவர் ஆவர். அர்த்தரதர் என்பவர் மிக குறைந்த வலிமை படைத்தவர். அதாவது நேருக்கு நேர் போரிடும் ஒரே ஒரு தேர்வீரனையும் வெல்ல முடியாமல் தோற்றுப் போய் விடுபவரே அர்த்தரதர் ஆவர்.

இத்தகைய அர்த்தரதர்களில் ஒருவனாகக் கர்ணனை வீடுமர் வகைப் படுத்தும்போது, கர்ணனுக்கு ஆத்திரம் எப்படி வராமல் போகும்? வீடுமர் தன்னையும் துரோணர், துரோணர் மகன் அசுவத்தாமா, பூரிசிரவஸ் ஆகியோரை அதிரதர் எனவும், சோமதத்தன், பகதத்தன், துர்மர்ஷன் ஆகியோரை மகாரதர் எனவும், கிருதவர்மன், சகுனி, சல்லியன், சயத்திரதன் ஆகியோரைச் சமரதர் எனவும் வகைப்படுத்தி, தம்மையும் காத்துக் கொள்ளத் திறமையில்லாத அர்த்தரதர்கள் என்ற வகையில் துரியோதனன் தம்பியர் தொண்ணூற்றொன்பதின்மரையும்,கர்ணனையும்,வகைப்படுத்த, கர்ணன் வீடுமரைச் சுட்டுப் பொசுக்கிவிடுவதைப் போன்ற கோபத்துடன் வீடுமர்மேல் பாய்கிறான். ''உன்னுடைய உயிரைப் பறித்துவிடுகிறேன். நானா அர்த்தரதன்? நான் அர்த்தரதனா, அதிரதனா என்பதை இப்பொழுதே காட்டி விடுகிறேன். ஏய் கிழவா! உனக்கு வீரமிருந்தால், உன்னுடைய உயிரைக் காத்துக்கொள், பார்ப்போம்'' எனக் கர்ணன் வீடுமன் மேல்பாய, இடையில் வந்து துரியோதனன் கர்ணனைத் தடுத்துச் சமாதானப்படுத்துகின்றான். துரியோதனனுக்காகக் கர்ணன் தன் மாளாக்

கோபத்தை அடக்கிக்கொண்டாலும், ''இனி நான் இங்கே நிற்பதில் அர்த்தமே இல்லை. இந்த அர்த்த ரதன், போரில் கலந்துகொண்டு என்ன சாதிக்கப் போகிறான்? துரியோதனா, இந்த வீடுமன் உயிரோடு இருக்கும் வரையில் நான் உனக்காகவும் போர் செய்யப்போவதில்லை. இது சத்தியம்'' என்றுசபதம் செய்தவனாக யாருடைய சமாதானத்திற்கும் காத்திருக்காமல், போர்க்களத்தை விட்டே புறப்பட்டுப் போய் விடுகிறான் கர்ணன். துரியோதனனுக்குப் போர் தொடங்குவதற்கு முன்னமே தோல்விமேல் தோல்வி; அடிமேல் அடி. பாண்டவர் பக்கத்தில் இத்தகைய குழப்பங்கள் ஏதும் இல்லாமல் வீரர்கள் வகைப்படுத்தப்பட்டு, படைகளும் அணிவகுக்கப்படுகின்றன.

''செங்கண்மால் உயிர், தருமன் மார்பு,
சுவேதன் ஆனனம், இருபுயம்
வெங்கண் வீமனும், விசயனும், திறல்வில்
மருத்துவர் மைந்தர் தாள்,
அங்கண்மா முடியரசர் மற்றும் அவய
ஆதிகள் ஆகவே
தங்கள் பூமியிலானபோதொரு வடிவ
மொத்தது தானேயே''

—அணிவகுப்புச் சருக்கம்: 16

போரில் வெற்றி பெறுவதற்கு இன்றியமையாத முதல் தேவை போர் வீரர்களிடம் காணப்படக்கூடிய ஒழுங்கும் கட்டுப்பாடும். அந்த ஒழுங்கும் கட்டுப்பாடும் பாண்டவர் படையில் காணப்பட்டது என்பதைத்தான் வில்லிப்புத்தூரார் மேற்கண்ட பாடலில் மிக நேர்த்தியாகச் சித்தரிக்கிறார். பாண்டவர் தளபதியான சுவேதன் படைக்கு முகமாக இருக்கிறான். தருமர் மார்பாகத் திகழ்கிறார். வீமனும் விசயனும் இருதோளாக விளங்குகின்றனர். நகுல சகாதேவர்கள் பாதமாக இருக்கின்றனர். மற்ற அரசர்கள் உடலின் பிற உறுப்புக்களைப் போல ஒழுங்குபட்டு விளங்க, பாண்டவர் படையாகிய உடலுக்கு உயிராகக் கண்ணபெருமான் திகழ்கிறார் என்கிறார் வில்லிப்புத்தூரார்.

இவ்வாறு குருசேத்திரப் போர்க்களத்தில் பாண்டவர்கள் மற்றும் துரியோதனன் படைகள் போருக்கு ஆயத்தமாகி அணி வகுத்து நிற்கின்றன. போர் முரசம் முழங்கியதும் போரும் தொடங்க வேண்டியது தான். ஆனால் அதற்குள் நேர்ந்து விட்டது பாண்டவர் அணியில் ஒரு மாபெரும் சங்கடம். பாண்டவர், துரியோதனன் படைகளுக்கு நடுவில் கண்ணபெருமான் தேரினைக்கொண்டு வந்து நிறுத்துகிறார். தேரில் அமர்ந்தவாறே தான் வெல்ல வேண்டிய எதிரியின் படையை முழுமையாக ஒரு பார்வை பார்க்கிறான் அர்ச்சுனன். அப்படையில் இருப்பவர் அனைவரும் தனக்கு உறவினர்களாகவும், நண்பர்களாகவும், வேண்டப்பட்டவர்களாகவும் விளங்குவதைக் கண்ட அர்ச்சுனன் மனம் தளர்ச்சியடைந்து ''நான் போர் செய்யமாட்டேன். எனக்கு நாடும் வேண்டாம், நகரமும் வேண்டாம். தாத்தாவைக் கொன்று, தம்பிகளைக் கொன்று, கல்வி கற்பித்த ஆசிரியரைக் கொன்று நண்பர்களைக் கொன்று நாடு கொள்வதில் எனக்கு நாட்டமே இல்லை. என்னால் போர் செய்ய முடியாது. என்னை விட்டு விடுங்கள். நான் மறுபடியும் வேண்டுமானாலும் காட்டுக்கே போய்விடுகிறேன்'', என்பதாகக் கூறித் தன்கையிலிருந்த காண்டீபத்தையும் கீழே போட்டுவிடுவதைக் காணுகின்றோம். காண்டீபத்தைக் அர்ச்சுனன் கீழே போட்டுவிட்ட அந்த நிலையில், கண்ணபெருமான் என்ன செய்கிறார்? அர்ச்சுனன் மனம் தெளிந்து, காண்டீபத்தைக் கையில் மறுபடியும் எடுப்பானா? யுத்தம் தொடங்குமா அல்லது நின்று போகுமா? என்பனவற்றையெல்லாம் இனி வரும் இதழில் காண்போம்.

— — —

மூன்றாம் அட்டைப்பட விளக்கம்

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்கள் பழநி தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தின் ஒரு கோடி ரூபாய் வைப்புநிதித் திட்டத்திலிருந்து கிடைத்த வட்டித் தொகையிலிருந்து 150 கிராமக் கோயில்களின் திருப்பணிக்குக் கோயில் ஒன்றிற்கு ரூபாய் 10,000 காசோலையாக வழங்குகிறார்.

சோழநாட்டினுடைய முதலமைச்சராகத் திகழ்ந்து ''பெரிய புராணம்'' இயற்றிச் சிறப்படைந்த சேக்கிழார் பெருமானை, நம் தமிழகத்தின் அறநிலையத்துறை அமைச்சராக அறநிலையத்துறைக்குச் சிறப்பினைச் சேர்த்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு ஆர்.எம்.வீ. அவர்கள் பாராட்டிய ''வரலாற்றுக் காப்பியம் தந்த சேக்கிழார்'' கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது. ''தொண்டுக்காக ஒருவர் நோபல் பரிசு பெற்றால் பாராட்டிக் கொண்டிருக்கிறோம். தொண்டர்களுக்காகவே காப்பியம் படைத்த சேக்கிழாரை மறந்துவிட்டுப் பாராட்டிக் கொண்டிருக்கிறோம்'' என்ற அமைச்சரின் கருத்து, நம்மில் பலரைச் சிந்திக்க வைக்கும்.

—இரா. கணேசன், பள்ளிப்பாளையம், ஈரோடு-6.

இலட்சுமிதேவியின் திருவிளையாடலை எடுத்து விளக்கிய திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் ''தெய்வத்துணை'' படிப்பதற்கு எளிமையாகவும் கருத்தாழம் மிக்கதாகவும் விளங்கியது.

—முருகேசன், வேலூர்.

சமயச் சான்றோர்களின் இயற் பெயர்களை கொடுத்து, அவர்களைக் கண்டுபிடிக்க முடிகிறதா என வினவியிருந்த வினாவும், படங்களுடன் தரப்பட்டிருந்த வினாவிற்கான பதிலும், மிக நன்றாக இருந்தது.

—தியாகரார்ஜன், சென்னை









மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு இராம. வீரப்பன் அவர்கள் 150 கிராமக் கோயில்கள் கட்ட "ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதியின்" வட்டியிலிருந்து நிதி வழங்கும் திட்டத்தைத் துவக்கி வைக்கிறார்கள். அறநிலையத் துறை ஆணையர் திரு க. சுந்தரமூர்த்தி ஐ.ஏ.எஸ்., பழநித் தண்டாயுதபாணி ஆலயத்தின் தக்கார் திரு க. பொன்னுசாமி மற்றும் துணை ஆணையர் திரு கே. எஸ். சோமசுந்தரம் ஆகியோர் உடன் உள்ளனர்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.